...tered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

...03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 16 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 18 (01.12.2004) புதன்கிழமை இதழ்:62

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!
மகாராசி சில்க்ஸ்
சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P No - 0777286247
(c-2203)

# ...றிவடையும் ஆபத்தில் போர்நிறுத்த உடன்பாடு!



## ...ண்காணிப்புக் குழுத் தலைவர் ஹொவ்டே தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்பாடு மிகவும் நெருக்கடியான கட்டத்துக்குள் சிக்கியிருப்பதாகவும்

தொடர்ச்சியாகப் பெருகிவரும் வன்முறைச் சம்பவங்களால் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறாவ் ஹொவ்டே அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிட்டிருப்பதாவது –

வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாகப் பெருகிவரும் வன்முறைச் சம்பவங்களால் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு பேராபத்து ஏற்பட்டிருக்கிறது.

இதனால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டியது தற்போது மிகமிக அவசரமான தேவையாகியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ...க்கரி மீது ...னேட் வீச்சு

...காததால் சேதங்கள் தவிர்ப்பு

(மட்டக்களப்பு)

...களப்பு நகரிலுள்ள பிரபல பேக் ...றின் மீது நேற்றிரவு 8.10 மணி ...இனந் தெரியாத நபர்களால் கைக் ...வீசப்பட்டது.

...வன்வெளி சந்தியிலுள்ள ஷன் ...க்கரி மீதே இந்தக் கைக்குண்டு ... இது பேக்கரிக்கு உள்ளே ...போதிலும் வெடிக்கவில்லை. ...டு வீசப்பட்டபோது பேக்கரி பணியா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ...ருமலையில் ஊரடங்கு நீக்கம் ... பதற்றம் தொடர்ந்து நீடிப்பு!



(திருகோணமலை)

...கோணமலையில் நேற்றுமுன்தினம் ...ற்ற வன்செயல்களை அடுத்து ...படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற் ...காலை நீக்கப்பட்டபோதிலும், அங்கு ...மயான இயல்புநிலை பாதிக்கப்பட்டே ...ந்தது.

...நற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்செயல்களை அடுத்து அங்கு விரைந்த கூட்டுப் படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்த கிரி தலைமையிலான பாதுகாப்புக் குழுவினரின் மாநாடு நேற்றுக் காலை 9 மணியிலிருந்து 11 மணிவரை திருகோணமலை கடற்படைத்தளத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட, கிழக்குப் பகுதி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி, 22 வது டிவிசன் தளபதி மேஜர் ஜெனரல் சாலிய குலதுங்க, கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க, திருமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே ஆகியோருடன் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஹர்த்தால்!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பொதுமக்கள் மீது படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பை வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ளது.

பொதுமக்கள் மீது படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும். வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் படையினரால் தாக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

பொதுமக்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

கடந்த 25 ஆம் திகதி வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு படையினர் தடைவிதித்தனர். இதன் போது அங்கிருந்த பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து ஏற்பட்ட மோதல் சம்பவங்களில் 8 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே பூரண

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ...யுதங்களுடன் கப்பல் ஒன்று ...லங்கை நோக்கி வருகிறதாம்

## சிங்களப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

இந்தியாவின் கேரளா கடல்பகுதியூடாக ...யுதங்கள் ஏற்றிய கப்பல் ஒன்று வட ...தியை நோக்கி வந்துகொண்டிருப்பதாக- ...ந்திய கடற்படை வட்டாரங்களை மேற் ...காள்காட்டி கொழும்பு சிங்களப் பத்திரிகை ...ன்று செய்தி வெளியிட்டிருக்கிறது

இது தொடர்பாக மேலும் தெரியவருவ ...வது-

...வளைகுடாப்பகுதியில் இருந்து புறப்பட்ட ...ந்தக்கப்பல் தொடர்பான தகவல்கள் இந் ...யக் கடலோரக் காவற்படைக்கு மூன்று ...ாட்களுக்கு முன்னரே கிடைத்திருந்தது.

இதையடுத்து இந்திய கடற்பகுதியில் கடலோர காவற் படையும் இந்தியக் கடற்படையும் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியிருக்கின்றன.

இது பற்றிய தகவல் இலங்கைக் கடற்படைக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் - இந்த ஆயுதங்கள் இந்தியாவுக்கு கடத்தப்படும் நோக்கத்துடன் கொண்டு வரப்படவில்லை என்றும். -

விடுதலைப்புலிகளுக்கே அவை கொண்டு வரப்படலாமென கருதுவதாகவும் இந்தியக் கடலோரக் காவற்படை கட்டளை அதிகாரி எம்.எஸ் டங்கி தெரிவித்ததாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# பிரபாகரனின் அழைப்புக்கு உடன் பதிலளிக்க வேண்டும்

## அரசிடம் ஐ.தே.க. வற்புறுத்து

(கொழும்பு)

அரசாங்கம் உடனடியாக இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையிலான பேச்சுக்கு முன்வரவேண்டும் என்று தனது மாவீரர்தின உரையில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் விடுத்த அழைப்புக் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு உடனடியாக வெளிப்படுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரை நிகழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில் -

அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்ற விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தெளிவாகவே உள்ளது. எனவே பிரபாகரனின் உரை தொடர்பாக அரசாங்கமே பதில் கூற வேண்டும்.

கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை துரதிஷ்டவசமானது. ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருக்குமானால் இத்தகைய நிலையொன்று ஏற்பட அனுமதிக்கப்படமாட்டாது.

எமது அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டை செவ்வனே கடைப்பிடிப்பதற்கான சூழலை ஏற்படுத்தியதுடன், சமாதானத்தை முன் கொண்டு சென்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இல்லத்தரசிகளே...! பாவனையாளர்களே...!!
# இதோ உங்களுக்கு கிளினோல் உற்பத்திப் பொருட்களை பெருமையுடன் அறிமுகம் செய்கின்றோம்...!

## கிளினோல் வாஷிங் பவுடர்
## கிளினோல் சோப்

### மற்றும்

- கார் வோஸ்
- எச்.பி.பவுடர்
- ஷை பிரசர்
- மொபைக் வோஸ்
- கிளாஸ் கிளீனர்
- ரொயிலற் கிளீனர்
- கொம்பியூட்டர் கிளீனர்
- எவர் சைன்
- அலோர் ரைல் கிளீனர்
- எயர் பிரசனர்
- அப்ஸ்ரறி கிளீனர்
- பைன் ஓயில்
- லோண்றி சோப்
- பார் சோப்
- டிஸ் வோஸ்
- டிஸ் வோஸ் பவுடர்
- டிஸ் வோஸ் பார்
- வோஸிங் பவுடர்
- லிகியூட் சோப்
- சொப்ற் சோப்
- வப்றிக் சொப்னர்




**கிளினோல் உற்பத்திகள் தரத்தில் உயர்ந்தவை - மலிவானவை.**
**உங்கள் இல்லங்களில் அவசியம் இருக்கவேண்டியவை....**

**கிளினோல் பவுடர், ஒரு கிலோ, இரண்டு கிலோ, இரண்டரைக்கிலோவுக்கு பிளாஸ்ரிக் வாளி அல்லது பேசின் இலவசமாக வழங்கப்படும்.**

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

**உங்களுக்குத் தேவையான கிளினோல் உற்பத்திகளையும், மற்றுஜன் உற்பத்திப் பொருட்களையும் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.**

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாண மாவட்ட
விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல / தொலைநகல் } 222 2662

பாவனையாளர்களே!

உங்கள் செலவை மிச்சம் பிடியுங்கள்
உங்கள் இல்லங்களில் இருக்கவேண்டியவை
கிளினோல் வாசிங் பவுடர்கள் வாங்கி பிளாஸ்ரிக் பேசின்கள், வாளிகளை இனாமாகப் பெறுங்கள்.
கிளினோல் சலவை சோப்புகளை நாங்கள் அறிமுகப்படுத்துகின்றோம்.
அதிசிறந்தவை, அதிதரமானவை, நீண்டகால சேவைக்கு உகந்தவை ஆடைகளுக்குப் பாதுகாப்பானவை.
எனவே உங்கள் தேவையை நிறைவேற்ற கிளினோல் உற்பத்திப் பொருட்களைப் பாவியுங்கள்.

(C/3405)

# இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அழுத்தம் கொடுப்போம்

## முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

இந்தியாவுக்குச் சென்றிருக்கும் ஆறுமுகம்தொண்டமான் நாடுதிரும்பியதும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கு அமைய இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை மீள ஆரம்பிக்குமாறு, நிச்சயமாக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என, அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

நமது ஈழ நாட்டுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் கூட்டணியில் இணைந்தவுடன், தமது கட்சிக் கட்டுக் கோப்புக்களுக்கு அமைய, எம்மைச் செயற்படவேண்டும் என ஜே.வி.பி. கேட்டுக் கொண்டது. ஆனால் நாம் அவ்வாறு செயற்பட முடியாது. எமக்கு ஒரு கட்டுக்கோப்பு ஒன்று உண்டு எனத் தெரிவித்து, சில தினங்களுக்கு முன்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தோம்.

தமிழ் மக்களின் பிணக்குகள் தீர்க்கப்படவேண்டும் என்பதே எமது குறிக்கோள். அதன் அடிப்படையில் புலிகளுடன் பேச்சு நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்கவுள்ளோம்.

எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. நாம் தொடர்ந்து 18 வருடங்களாக - விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, சமாதான சூழல் ஒன்றை ஏற்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தே வருகின்றோம். ஜே.வி.பி விடும் அறிக்கைக்கும், எமக்கும் தொடர்புகள் எதுவும் இல்லை. இவ்வாறு இவர்களுடன் இணைந்து அறிக்கை விடும் அளவுக்கு நாம் இல்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையில் - இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். இல்லையேல் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

ஆனால், மீண்டுமொரு யுத்தத்துக்குப் போவதைவிட, இன்னும் பொறுமையைக் கடைப்பிடித்துப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்காகப் பொறுமை என்றால் விட்டுக் கொடுப்பு என பொருள்படாது.

தமிழ் மக்கள் கடந்த 22 வருடங்களாக மனித உரிமைகளை இழந்திருந்தமையை வன்னி சென்றபோது, நான் பார்தேன் என அவர் அந்தச் செவ்வியிலேயே தெரிவித்தார்.

# மூவாயிரம் பொலிஸார் விரைவில் ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்துக்கு தற்போது கடுமையான ஆட்பற்றாக்குறை நிலவுவதனால், அதனை ஈடுசெய்யும் வகையில், 3000 பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்படும் என, பொலிஸ் நிர்வாகப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்தார்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுபவர்களில் ஒரு தொகுதியினர் பொலிஸ் விசேட பிரிவிலும் சேர்க்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார். (தே)

# வெலிக்கடைச் சிறையிலுள்ள கைதியே அம்பேபிட்டியவின் கொலைச் சூத்திரதாரி

## பிரதம நீதியரசர் தகவல்

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய தண்டனைக் கைதியொருவரே மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலையின் சூத்திரதாரி என, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார்.

சிலாபம் நீதிமன்ற கட்டடத் தொகுதியில், சட்டத்தரணிகளுக்கான மண்டபத்தை திறந்து வைத்து உரையாற்றிய அவர் -

இந்த சூத்திரதாரி வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து கொண்டு கையடக்க தொலைபேசி ஊடாகவே இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார் என்றும் விசாரணைகளின் போது தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அந்த அளவுக்கு நீதித்துறை இலங்கையில் சீர்குலைந்து விட்டது என்றும் சுட்டிக் காட்டினார். (01)

# தென்னாபிரிக்க வர்த்தகர்களுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காவிடின், மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படும் சூழ்நிலை உருவாகிவருகிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தென்னாபிரிக்க வர்த்தகப் பிரமுகர்களை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைகளின் அடிப்படையில், அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, அரசுக்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதன்மூலம் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படுவதைத் தடுகக முடியும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர்நாள் உரையில் - தமது பக்க நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

இதை ஏற்றுக்கொண்டு, நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருமாறு, சர்வதேச நாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதன்போது நாட்டில் மீண்டும் சமாானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று, தாம் விரும்புவதாகத் தென்னாபிரிக்க வர்த்தகப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் , ஜோசப் பரராஜசிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வாகனங்களில் கறுப்புக் கண்ணாடி பொருத்துவதற்கு தடைவிதிப்பு !

மோட்டார் வாகனங்களில் கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்படுவது இன்று முதல் தடை செய்யப்படுவதாக மோட்டார் வாகனப் பிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் ஆலோசனையின் பேரில், இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான அனுமதி பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானத்துக்கான அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

வாகனங்களில் கறுப்புக் கண்ணாடிப் பாவனைத் தடையை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் இது தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது நிகழ்ந்துவரும குற்றச் செயல்களுக்குக் கறுபபுக் கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனங்களே பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கிடைத்துள்ள தகவல்களை அடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதியில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பயணம் செய்ததும், கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட பஜிரோ வாகனமேயாகும்.

இது போன்றே போதைவஸ்துக் கடத்துவோரும், சட்டவிரோத மதுபானங்களைக் கடத்துவோரும் இந்த வகையான வாகனங்களையே பயன்படுத்துகின்றனர். பொலிஸாரால் தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் கூட, இந்த வாகனங்களைப் பயன்படுத்தி தப்பி விடுகின்றனர். இது நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலாகும்.

எனவே, இதனை நடைமுறைப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், யாருக்காவது கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனங்களில் பயணம் செய்ய வேண்டிய தேவை ஏற்படின், அவர்கள் பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானத்துக்கான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜாவிடமோ, அல்லது பொலிஸ்மா அதிபரிடமோ இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (தே)

# வெளிநாட்டுத் தபால் மோசடிகளை தடுப்பதற்கு விசேட குழு அமைப்பு!

(கொழும்பு)

கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிவர்த்தனை மையத்தில் வெளிநாடுகளில் இருந்து வரும் தபால் பொதிகளைத் திருடும் குழு ஒன்றின் 8 பேரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்களில் மத்திய தபால் பரிவர்த்தனை மையத்தில் பணியாற்றும் இரண்டு தபால் அதிபர்களும் அடங்குவர்.

ஏற்கனவே இது தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வெளிநாடுகளில் இருந்து வரும் தபால் பொதிகளில் உள்ள பொருட்களைத் திருடி வருவதாக தபால் அதிபரிடம் இருந்து கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகள் உட்பட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை வெளிநாட்டுக் கடிதங்கள் மற்றும் பொதிகள் காணாமற் போனமை உட்படத் தபால் திணைக்களத்தில் நிகழும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய கடுமையான நிலைப்பாடுகள் தொடர்பான விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்குத் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜயரட்ன விசேட குழுவொன்றை அமைத்துள்ளார்.

காணாமற்போன தபால் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக, இரகசியப் பொலிஸார் இது வரை விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்தக் குழு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடிதங்களைப் பாதுகாப்பது தபால் திணைக்களத்தில் நிகழும் ஊழல்கள் மற்றும் மோசடிகளை இல்லாதொழிப்பது குறித்து ஆராய்ந்து, மூனறுமாத காலப்பகுதிக்குள் தமக்கு அறிவிக்கவேண்டுமெனவும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (தே)

# நீதிமன்றம் அமைந்துள்ள பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம்

(கொழும்பு)

நீதித்துறைக்கு தனியான பொலிஸ் பிரிவு நேற்றுமுன்தினம் முதல் செயல்பட தொடங்கியதையடுத்து, கொழும்பு நீதிமன்ற கட்டடத் தொகுதி அமைந்துள்ள 'ஹல்ஸ்டொப்' பிரதேசம் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தகுந்த காரணமின்றி அந்தப் பிரதேசத்தில் பொதுமக்கள் நடமாட்டம் தடை செய்யப்பட்டுள்ளது.

350 பொலிஸாரைக் கொண்ட நீதித்துறை பாதுகாப்பு பிரிவில், விசேட அதிரடிப் படையினரும் இணைக்கப்பட்டுள்ளனா. கொழுமபு நீதிமன்ற கட்டடத் தொகுதிக்குச் செல்லும் சகலரும் தீவிர உடல் சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட பின்பே, உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

சட்டத்தரணிகள் மற்றும் நீதித்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் தனியான வாசல் ஒன்றும், பொதுமக்களுக்கு 4 வாசல்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (01)

## சனசமூக நிலையத்துக்கான நிதியுதவி

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டின் கீழ் சங்கானை தெற்கு சனசமூக நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான - ரவிராஜ் 50 ஆயிரம் ரூபாவையும், சிவாஜிலிங்கம் 20 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஊடாக வழங்கப்பட்ட இந்த நிதியிலிருந்து நிலையத்தின் சுற்றுமதில் கட்டுதலும், மலசலகூடம் அமைத்தலும் இடம் பெறவுள்ளதாக நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (48)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியோரை சேவையிலிருந்து நீக்குவதற்கான கால எல்லை மேலும் நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களைச் சேவையிலிருந்து விலக்குவதற்கான கால எல்லையை நீடிததுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

களுத்துறை, கம்பஹா, கொழும்பு, அநுராதபுரம், மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இருந்து தப்பி ஓடியவர்களுக்கே இந்தக் கால எல்லை எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அநுராதபுரம் மாவட்டத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரையும், குருநாகலில் 13 ஆம் திகதிமுதல் 17 ஆம் திகதிவரை, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் 20 ஆம் திகதிமுதல் 31 ஆம் திகதி வரையும் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்ட விசேட அலுவலகங்களில் சரணடைந்து, தங்களது நிரந்தர விலகலை அறிவிக்கும்படி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை நாடளாவியரீதியில் 350 ஆயிரம் பேர் படையிலிருந்து தப்பியோடியதாகப் பாதுகாப்பு அமைச்சு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# இந்திய-இலங்கை கடற்படை இணைந்து கடலில் பயிற்சி!

## ஆண்டு இறுதிக்குள் ஆரம்பம்

இந்தியக் கரையோர காவற்படையும், இலங்கைக் கடற்படையும் இணைந்து கடலில் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தக் கடற்படைப் பயிற்சி ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை இந்தியக் கடற்படைத் தலைமையகத்தில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளதாக இந்தியக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படைக்குப் போர்க் கப்பலைக் குத்தகைக்கு விடுவதற்கும், இந்தியக் கடற்படைத்தரப்பு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# கொல்கத்தா டெஸ்ட்டும் சமநிலையை நோக்கி!







(கொல்கத்தா)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 359 ஓட்டங்களைப் பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆட்டத்தின் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்க அணி 305 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது.

இதையடுத்து முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இந்திய அணி நேற்றுமுன்தினம் ஒரு விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஷேவாக் 82 ஓட்டங்களுடனும், ராவிட் 33 ஓட்டங்களுடனும் நேற்று ஆட்டத்தை ஆரம்பித்தனர். அதிரடி ஆட்டம் ஆடி ஓட்டங்களை குவித்த ஷேவாக் சதம் அடிப்பார் என்று பெரிதாக எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர் என்ரினியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இந்திய அணியின் ஸ்கோர் 144 ஆக இருந்தபோது - ஷேவாக் ஆட்டமிழந்தார். அவர் 11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 88 ஓட்டங்களைக் குவித்தார்.



இதனைத் தொடர்ந்து ராவிட்டுடன் டெண்டுல்கர் களம் இறங்கினார். இருவரும் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்திக்கொண்டிருந்தபோது - டெண்டுல்கர் விக்கெட்டை புருன் வீழ்த்தினார்.

54 பந்துகளை எதிர்கொண்டு 3 பவுண்டரிகளுடன் டெண்டுல்கர் 20 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் போல்டாகி ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ராவிட்டுடன் கங்கூலி இணைந்து களம் இறங்கினார்.

இவர்களின் ஆட்டம் சூடுபிடித்துக்கொண்டு இருந்தநிலையில் அணியின் ஸ்கோர் 238 ஆக உயர்ந்தபோது ராவிட்டின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

அன்ரூ ஹோலின் பந்துவீச்சில் ராவிட் போல்டானார். ராவிட் 247 பந்துகளை எதிர்கொண்டு 8 பவுண்டரிகளுடன் 80 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து லக்ஷ்மன் - கங்கூலி ஜோடி ஆடத்தொடங்கியது. எனிலும் அணியின் ஸ்கோர் 267 ஆக உயர்ந்தபோது கங்கூலி ஆட்டமிழந்தார். அவர் 73 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது - புருன் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் லக்ஷ்மன் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் என்ரினியின் பந்துவீச்சில் ஒன ரொங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

நேற்று ஆட்டநேர முடிவில் இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 359 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தினேஷ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், இர்பான் பதான் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் புருன், என்ரினி தலா 2, பொலக், ஹோல், ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். தென்னாபிரிக்க அணி 30 ஓட்டங்களை உதிரிகளாகக் கொடுத்திருந்தது. ஆட்டத்தின் நான்காவது நாள் இன்றாகும்.

## ரஷ்ய வீராங்கனைகள்

# ஷரபோவா - மிஸ்கினா இடையே மோதல்!



(மொஸ்கோ)

ரெனிஸ் களங்களில் கலக்கும் அழகு வீராங்கனைகள் அனஸ்டாசியா மிஸ்கினாவுக்கும், மரியா ஷரபோவாவுக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது.

ரஷ்ய அணியில் ஷரபோவா இடம்பிடித்தால் தான் விலகிவிடுவேன் என்று பகிரங்கமாக எச்சரித்துள்ளார் மிஸ்கினா.

ரஷ்ய ரெனிஸ் நட்சத்திரங்கள் மரியா ஷரபோவா, அனஸ்டாசியா மிஸ்கினா இருவரும் சர்வதேச ரெனிஸ் அரங்கில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

விம்பிள்டன் உட்பட இந்த ஆண்டில் பல்வேறு பட்டம் கைப்பற்றியவர் மரியா ஷரபோவா. பிரெஞ்ச் ஓபன் உட்பட பல பட்டங்கள் வென்று கலக்குகிறார் அனஸ்டாசியா மிஸ்கினா. இரு அழகு வீராங்கனைகளுக்குள் இப்போது அடிதடி.

அடுத்த ஆண்டு நடக்கும் பல்வேறு முக்கிய போட்டிகளில் பங்கேற்கும் ரஷ்ய அணியில் ஷரபோவாவும் இடம்பிடித்துள்ளார்.

ஷரபோவா இதுவரை ரஷ்ய அணிக்காக விளையாடியதில்லை. தனிநபர் போட்டிகளில் மட்டுமே பங்கேற்பவர். முதல்முறையாக ரஷ்ய அணியில் இவர் நுழைகிறார். ஷரபோவா அணியில் இடம்பிடித்தால் நான் விலகிக்கொள்வேன் என்று மிரட்டுகிறார் அனஸ்டாசியா.

ரஷ்ய வீராங்கனை என்றுதான் பெயரே தவிர ஷரபோவா முழுக்க முழுக்க அமெரிக்கப் பெண் போலத்தான் நடந்துகொள்கிறார். ரஷ்ய மொழியை அவருக்கு ஒழுங்காகப் பேசக்கூடத் தெரியாது. ரஷ்ய அணிக்காக இதுவரை அவர் ஆடியதும் இல்லை.

ஆனால் அதுவல்ல பிரச்சினை.

அவரது அப்பாவுக்கும் எனக்கும் சரிப்பட்டுவராது. ஷரபோவாவின் அப்பா யூரி என்னை மரியாதைக் குறைவாக நடத்துகிறார் என்கிறார் அனஸ்டாசியா மிஸ்கினா.

மரியாவின் அப்பா யூரி தனது மகளுக்கு ரெனிஸ் பயிற்சியாளராகவும் இருக்கிறார். போட்டி நடக்கும்போதே மகளுக்கு 'இப்படி விளையாடு, அப்படி ஷொட் அடி...' என்று பயிற்சி தருகிறார் என்று இவர் மீது குற்றச்சாட்டு உண்டு. சமீபத்தில் கூட ரெனிஸ் நிர்வாகிகள் இந்தப் பிரச்சினைக்காக மரியாவைக் கண்டித்தனர்.



லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சமீபத்தில் நடந்த டபிள்யூ.டி.ஏ ரெனிஸ் மரியா - மிஸ்கினா அரையிறுதிப் போட்டியில் இந்த மோதல் பெரிதாக வெடித்தது. இதில் மரியா வென்றார். இதன் காரணமாக பலத்த கோபத்தில் இருக்கிறார் அனஸ்டாசியா.

எனக்கும் மரியாவுக்கும் இடையே நடந்த அந்தப் போட்டியில் யூரி தலையீடு மிக அதிகமாக இருந்தது. அரங்கில் இருந்தவாறே மரியாவை நோக்கி நிறைய அறிவுரை அள்ளி வீசினார்.

தவறுசெய்யும் போது பலத்த குரலில் கத்தினார். எங்கே ஒரு கட்டத்தில் உள்ளே குதித்துவிடுவாரோ என்று கூட நான் பயந்தேன். எனக்கான மரியாதையை அவர் தரவில்லை. ஆகவே ரஷ்ய அணியில் ஷரபோவா சேர்க்கப்பட்டால் நான் கட்டாயம் விலகிக்கொள்வேன் என்கிறார் அனஸ்டாசியா.




# லாரா உள்ளிட்ட 15 வீரர்களும் மீண்டும் அணிக்கு திரும்பினர்



மேற்கிந்திய வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையிலான விளம்பர ஒப்பந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்ததால் கப்டன் பிறைன் லாரா உள்ளிட்ட 15 வீரர்களும் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அவுஸ்ரேலியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தத் தொடருக்கான புதிய விளமபர ஒப்பந்தம் தொடர்பாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. கப்டன் லாரா உட்பட 15 முன்னணி வீரர்கள் இந்தப் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுப்புத் தெரிவித்தனர். இதனால் அவுஸ்ரேலியத் தொடருக்கான அணியிலிருந்து அவர்கள் நீக்கப்படுவதாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்தது.

முக்கிய வீரர்களைத் தவிர இரண்டாந்தர அணியை அனுப்ப நினைத்தால் மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரிலிருந்து நீக்கப்படுமென அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இதனால் இந்தப் பிரச்சினை குறித்து கிரீனிடா பிரதமர் கெய்த் மிட்செலும், பார்படோஸ் விளையாட்டுத்துறை அமைச்சர் றெஜினோல்ட் போர்லே இருவரும் நடுவராக இருந்து கிரிக்கெட்சபை - வீரர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்தினர். ஒரு நாளுக்கும் மேலாக நடந்த இந்தப் பேச்சுவார்த்தை சுமுகமான முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து லாரா உள்ளிட்ட மற்ற வீரர்கள் அனைவரும் மீண்டும் அணியில் தேர்வுசெய்யப்படுவார்கள் என கிரிக்கெட் சபை கூறியது. பயிற்சி முகாமிலும் வீரர்கள் விளையாட சம்மதம் தெரிவித்துள்ளனர். இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அவுஸ்ரேலிய பயணம் திட்டமிட்டபடி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இரண்டாவது டெஸ்டிலும் அவுஸ்ரேலிய அணி வெற்றி!



(அடிலெய்ட்)

அடிலெய்ட்டில் நடைபெற்று வந்த நியூஸிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 213 ஓட்டங்களால் வெற்றி பெற்று அவுஸ்ரேலிய அணி தொடரை முழுமையாகக் கைப்பற்றியது.

அவுஸ்ரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்த நியூஸிலாந்து அணி இரண்டு டெஸ்ட போட்டிகளில் விளையாடியது.

முதல் டெஸ்ட் போட்டியில் இனிங்ஸ் வெற்றியைப் பெற்ற அவுஸ்ரேலிய அணி இரண்டாவது டெஸ்ட்டில் 213 ஓட்டங்களால் நியூஸிலாந்து அணியைத் தோற்கடித்தது.



போட்டியின் நான்காவது நாளான நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களுடன் இருந்த நியூஸிலாந்து அணியினர் நேற்று ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

ஆனால் ஒரே ஒரு ஓட்டத்தை மட்டுமே அணி பெற்றிருந்த நிலையில், ஓரம் ஆட்டமிழந்து சென்றார். அவர் 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.

அடுத்ததாக மக்கலமும் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார். இதன்பின்னர் விற்றோரி 59 ஓட்டங்களுடனும், பிராங்ளின் 13 ஓட்டங்களுடனும், வைஸ்மன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களுடனும், மார்ட்டின் 2 ஓட்டங்களும் பெற்றனர்.



250 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் நியூஸிலாந்து அணி 213 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் மக்ரா, ஜிலெஸ்பி, கஸ்பரோவிச், வோர்ன், லீமன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸில் 575 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 139 ஓட்டங்களையும் பெற்றிருந்தது. நியூஸிலாந்து முதல் இனிங்ஸில் 251 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 250 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

16.




17. கீழே உயரத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தியுள்ள தாவரங்கள் எவை எனத்தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.
1) வாழை, துளசி, மா, மூங்கில்
2) தென்னை, பனை, மா, வாழை
3) கத்தரி, வாழை, மூங்கில், தென்னை
4) கத்தரி, மூங்கில், வாழை, தென்னை

இல 18 முதல் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

18. எனது அக்கா கமலாவும், தங்கை மாலாவும் பெண்கள் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். இவ்வாக்கியங்களை இரண்டு தனி வாக்கியங்களாக மாற்றுக.
1. ..........................................
2. ..........................................

19. இன்று வானத்தில் ஆதவனைக் காணவில்லை. ஆதவன் என்பதன் ஒத்தசொல்
1) சந்திரன் 2) சூரியன் 3) குளிர் 4) வியாழன்

இல 20 முதல் 21 வரை பின்வரும் பாடலைப்பார்த்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கடன் இல்லை கவலை இல்லை
கடும் பிணியும் இல்லை
காதலுறு விருந்தினரை ஆதரவு செய்வேன் .
உடனாக உதவிபுரி மனைவி மக்களோடு
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவன் எக்காலும் உண்மை.

20. பிணி என்பதற்கு ஒத்தசொல் யாது?
..........................................

21. ஆதரவு என்பதற்கு எதிர்ச்சொல் யாது?
..........................................

22. நிமலின் இன்றைய தினத்திற்குரிய வயது 26 வருடங்களாகும். விமலின் இன்றைய தினத்திற்குரிய வயது 6 வருடங்களாகும். இன்றிலிருந்து எத்தனை வருடங்கள் சென்ற பின்னர் நிமலின் வயது விமலின் வயதைப் போல் மூன்று மடங்காகும்?
..........................................

23. பாலன் மாலை நேரம் கடற்கரையால் நடந்து செல்லும்போது நிழலானது அவனுக்கு வலது கைப்பக்கத்தில் விழுந்தது கடற்கரை என்பதைப் பிரித்து எழுதுக.
..........................................

இல 24 இற்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.



பணியகம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்களின் படங்கள் அருகே உள்ளது. ஒருவரின் படம் ஒரு தடவைக்கு மேலும் இருக்கலாம். இவ் அலுவலகத்தில் கடமையாற்றுபவர்கள் எத்தனை பேர்?

1) 06 2) 12 3) 07

பின்வரும் சிட்டையை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

| பொருள் | அளவு | விலை (ரூபா.சதம்) |
|---|---|---|
| சீனி | 1 Kg | 33.00 |
| தே.எண்ணெய் | 1 l | 75.00 |
| கொப்பி | 1 டசின் | 300.00 |
| நாடா | 1 m | 15.00 |
| மொத்தம் | | .................. |

25. 500 கிராம் சீனியின் விலை யாது?
1) 33.00 2) 16.00 3) 16.50 4) 16.75

26 1 1/2 l தேங்காய் எண்ணெயின் விலை யாது?
1) ரூபா 112.50 2) 11.50 .3)110.50

27. 1 கொப்பியின் விலை யாது?
1) ரூபா 20.00 2) ரூபா 30.00
3) ரூபா 40.00 4) ரூபா 25.00

28. 50 சென்றி மீற்றர் நாடாவின் விலையாது?
1) ரூபா 7.50 2) ரூபா 8.50
3) ரூபா 9.50 4) ரூபா 10.50

29. சிட்டையில் தரப்பட்ட பொருட்கள் முழுவதையும் வாங்க எவ்வளவு பணம் தேவை?
1) ரூபா 623.00 2) ரூபா 523.00
3) ரூபா 423.00 4) ரூபா 323.00

இல 30 - 34 வரையுள்ள வினாக்களுக்கு சரியாயின் √ எனவும் பிழையாயின் X எனவும் எழுதுக.

30. இலங்கையின் தேசிய மரம் நாகமாகும். (......)

31. இலங்கையின் ஏற்றுமதிப் பயிர்கள் நெல், மா, வாழை என்பனவாகும். (......)

32. தமிழ் மொழியிலுள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டு ஆகும். (......)

33. வாழை இருவித்திலைத் தாவரமாகும். (......)

**இல 35-40 வரை கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான வினாக்களுக்குரிய விடையை நிரப்புக.**

35. அச்சாணி இல்லாத் தேர் ............... இப்பழமொழியைப் பூர்த்தி செய்க.

36. 1,3,5,7,9 ......... என்பன ................. எண்களாகும்.

37. பெருநூலோடி ............... ...... தையல்களில் ஒன்றாகும்.

38. கரம். ..................... விளையாட்டுக்களில் ஒன்றாகும்.

39. சாதாரண மனிதனின் பற்களின் எண்ணிக்கை ... ...... ஆகும்.

40. வாள், சீவுளி, உளி போன்ற உபகரணங்கள்..... தொழிலுக்குப் பயன்படுகின்றன.

**T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd**
**ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்**

இங்கே மழக்கவும்





# மாணவர் மலர்

**மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2004**

## சுற்றாடல் சார் செயற்பாடு

01. மருத்துவச் செடிகள் 3 தருக.
1. ............ 2. ............ 3. ............

02. சுவையான உணவைக் கொண்ட வித்துக்கள் இரண்டினை எழுதுக.
1. ..........................................
2. ..........................................

03. மரப்பொந்துகளை வாழ்விடங்களாகக் கொண்ட பிராணிகள் இரண்டு தருக.
1. ..........................................
2. ..........................................

04. கூடு கட்டி வாழும் விலங்கினங்கள் மூன்று தருக.
1. ..........................................
2. ..........................................
3. ..........................................

05. முட்டையிடும் பிராணிகள் மூன்று தருக.
1. ..........................................
2. ..........................................
3. ..........................................

06. நுளம்பின் வாழ்க்கை வட்டங்கள் எழுதுக.
..........................................

07. நீர் மேற்பரப்பில் வாழும் பிராணிகள் எவை?
..........................................

08. நுளம்பினால் ஏற்படும் நோய்கள் எவை?
..........................................

09. நமது நாட்டில் காணப்படும் சந்தைகள் இரண்டினை எழுதுக.
1. .................. 2. ..................

10. நுகர்வோர் என்று அழைக்கப்படுபவர் யார்?
..........................................

11. முழுமையாகத் தயார் செய்யப்பட்ட உணவு வகைகள் இரண்டினை எழுதுக.
1. ..........................................
2. ..........................................

12. காலாவதியான உணவை உட்கொள்ளுவதால் ஏற்படும் தீமைகள் இரண்டினை எழுதுக.
1. .................. 2. ..................

13. உணவுக்குப் பயன்படும் கீரை வகைகள் எவை?
..........................................

14. வியாபாரம் பெருக யாது செய்தல் வேண்டும்?
..........................................

15. அதிகளவு ஈக்கள் எத்தகைய உணவு விற்பனை நிலையங்களுக்கு வருகின்றன?
..........................................

16. எமது நாட்டின் பிரதான உணவு யாது?
..........................................

17. குறுங்காலப் பயிர்கள் மூன்று தருக.
1. ............ 2. ............ 3. ............

18. பழம்பாகு செய்யப்படும் பழவகைகள் மூன்றை எழுதுக.
1. ............ 2. ............ 3. ............

19. கிழங்கு வகைகள் மூன்றை எழுதுக.
1. ............ 2. ............ 3. ............

## சிங்களம்

பின்வரும் படங்கள் குறிக்கும் சொல்லை சிங்கள மொழியில் எழுதுக.

1. **9**

2. 

3. 

4. **0**

5. 

6. 

7.

8.

9. 

10. 

பின்வரும் சொற்களை சிங்கள மொழியில் எழுதுக.

11. எட்டு : .............. 12. பாடசாலை : ..............
13. தண்ணீர் : .............. 14. சாப்பாடு : ..............
15. புத்தகம் : .............. 16. வீதி : ..............
17. அண்ணா : .............. 18. வீடு : ..............
19. அலுவலகம் : .............. 20. மாம்பழம் : ..............

# ஆங்கிலம்

பின்வரும் படங்கள் குறிக்கும் ஆங்கிலச் சொற்களை எழுதுக.

1.  ..........
2.  ..........
3.  ..........
4.  ..........
5.  ..........
6.  ..........
7.  ..........
8.  ..........
9.  ..........
10.  ..........
11.  ..........
12.  ..........

பின்வரும் ஆங்கிலச் சொற்களை தமிழில் எழுதுக.

13. Sunflower : ..........
14. Woodapple : ..........
15. Lorry : ..........
16. Moon : ..........
17. Ship : ..........
18. Good Morning : ..........
19. Hen : ..........
20. Thank You : ..........

# ஆக்கம், அழகியல், சுகாதாரம், விளையாட்டு

1. இந்த உபகரணத்தின் பெயர் என்ன?
2. இதனை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் எவை?
3. தையல் வகைகளைக் குறிப்பிடுக.
4. சிறு குழந்தைகளின் நாடித்துடிப்பு (நிமிடத்துக்கு) யாது?
5. உயிர்ச்சத்து D குறைபாட்டால் ஏற்படும் நோய் யாது?
6. முதலுதவிப் பெட்டியில் உள்ள முக்கிய பொருட்கள் ஐந்து தருக.
7. மனித உடலின் சாதாரண வெப்பநிலையைப் பரனைற்றிலும், சென்ரிகிரேட்டிலும் தருக.
8. மேலொட்டித் தாவரங்கள் இரண்டினைத் தருக.
9. நவீன விளையாட்டுக்கள் இரண்டினை எழுதுக.
10. மைதான நிகழ்ச்சிகள் இரண்டினை எழுதுக.
11. அடிப்படை நிறங்கள் எவை?

கீழே உள்ள படங்கள் காட்டும் விளையாட்டுக்களின் பெயர்களை ஆங்கிலத்தில் தருக.

1. 
2. 
3. 
4. 

பின்வரும் சமிக்ஞைகள் எதனைக் காட்டுகின்றன என்பதை எழுதுக.

1. 

2. 
3. 
4. 

*இங்கே மடிக்கவும்*



இல 01 மதல் 02 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான உருயாது?

01. வளரும் - இடம் பெயராது - அசையும்




02 வெயில், குளிர், மழை, பாதுகாப்பு




கீழேயுள்ள பந்தியில் தரப்பட்டுள்ள பிழைகளைக் கண்டு கவனமாக வாசித்து திருத்தி எழுதுக.

காடுகளை அழிப்பதைத் தடை செய்யவேண்டும். விட்டிற்கு இரண்டு மரங்களை வளர்க்க வேண்டும். நகரங்களில் இருக்கும் தொழிற்சாலைகளை நகரங்களிலிருந்து வெளியே அமைகக வேண்டும். விடுகளில் குப்பைகளை உரிய இடத்தில் போட வேண்டும். கழிவுக் கால்வாய்களை முடி வைக்க வேண்டும்.

03. மேலே கூறப்பட்ட சொற்களில் உள்ள எழுத்துப் பிழையுள்ள சொற்களை எழுதுக.

1. .......... 2. ..........
3. ..........

04. மேலுள்ள பந்தியில் பெயர்ச் சொற்கள் இரண்டினை எழுதுக.

1. ..........
2. ..........

கீழ்வரும் செயற்பாடுகளை அவதானித்து, இல 05 முதல் 06 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.




05. படத்தில் காற்று வீசும் திசை யாது?




06. சட்டியில் தண்ணீர் சரியாக நிற்கும் நிலையைக் காட்டும் உரு எது?

07 முதல் 11 வரை சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.



அருகேயுள்ள பத்திரிகையை அவதானியுங்கள். இது ஒரு ஈழநாடுப் பத்திரிகையாயின் இப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளவை யாவை?

08. கடலில் வாழ்ந்து வந்த தவளை ஒரு நாள் பூச்சி ஒன்றைச் சந்தித்த போது, அதனை உணவாக உட்கொண்டது. இதில் உயிருள்ள பிராணிகள் எவை?

09. பசியினால் வாடிய நாய் ஒன்று விட்டில் உணவு கடைக்காத தால, மரத்தின்மேல் ஏறி அங்கு நின்ற கோழியைப் பிடித்துச் சாப்பிட்டது.
மேலுள்ள வாக்கியம் காட்டும் பெயரெச்சம் ஒன்றினை எழுதுக.

10. வெளிநாட்டில் பலகாலம் இருந்து திரும்பிய தனது தாயைக் கண்ட மயூரன் முகமலர்ந்து சந்தோசமடைந்தான். சந்தோசமடைந்தான் என்பதன் நிகழ்காலம் யாது?

11. மேகங்கள் கருக் கொண்டன. பட்சிகள் தம் கூடு நோக்கிப் பறந்தன. இவ்விரு வாக்கியங்களையும் இணைத்து எழுதுக.

12. கீழுள்ள படங்களில் அதிபர் ஒருவர் காலையில் எழுந்து பாடசாலை செல்லும் வரையிலான ஒழுங்குகள் தரப்பட்டுள்ளன. அச்செயற்பாடுகளை ஒழுங்கு முறையில் காட்டும் விடையின் கீழ் கீறிடுக.



1) 2,4,3,1,5 2) 2,5,1,3,4
3) 4,5,1,2,3

இல 13 முதல் 14 வரையுள்ள உருக்களில் அடுத்து வரும் உருக்கோலம் எது எனத்தெரிந்து, அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

13. 
(..........)

14. 
(..........)

இல 15 முதல் 16 வரையுள்ள எண்கோலங்களில் விடுபட்ட எண்களைக் கணித்து சரியான விடையை விடைக் கோட்டில் எழுதுக.

15. 

(..........)

# யாழ்.குடாநாட்டு நிலைமைகள் குறித்து ஜெயவர்த்தனபுர மாணவர்கள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நடைபெறுகின்ற புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளில் தமது பங்கு என்ன என்பது தொடர்பாக ஆராய்வதற்கு, ஸ்ரீஜெயவர்த்தன பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் கலாநிதி தெகரகொட தலைமையிலான மாணவர் குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டனர். இதன்போது யாழ்.குடாநாட்டில் தற்போது புனர்நிர்மாணப் பணிகளைவிட, நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும். அதற்கு நீங்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

பேச்சுக்கள் தொடரும்போது விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி வரைபின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெறவேண்டும். இடைக்காலத் தன்னாட்சி வரைபு என்பதை விடுதலைப் புலிகள் முன்வைத்தாலும் கூட, அது ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் வரைபாகும்.

ஒரு லட்சம் மக்கள் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகத் தற்போதும் அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர். இவர்கள் மீள் குடியமர்த்தப்படவேண்டும் என - பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர். இந்தக் கருத்துக்கள் நியாயமானதென விரிவுரையாளர்களும், மாணவர்களும் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் விரிவுரையாளர் எஸ்.பின்னவல, ஸ்ரீஜெயவர்த்தன பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் கலாநிதி கே. தெகரகொட, சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.கபுனசேன, எம்.கே.ரட்ணாயக்கா ஆகியோர் உட்பட 30 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து அவர்கள் யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்துக்குச் சென்று, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரையும் சந்தித்தனர். (தீ)

# நீதியாளர் மேஜர் தேசிகன் நினைவாக வேலணையில் பஸ்நிலையம் திறப்பு!





நீதியாளர் மேஜர் தேசிகன் ஞாபகார்த்தமாகவும், தமிழீழ மாவீரர்களின் நினைவாகவும் அமைக்கப்பட்ட பேரூந்து தரிப்பு நிலையம் ஒன்று கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பேரூந்து நிலையத்தின் பெயர் பலகையை நெடுந்தீவு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ந.கண்ணன் தீரைநீக்கம் செய்து வைத்தார். பேரூந்து நிலையத்தை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் ந.செம்மணன் திறந்துவைத்தார். தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், அம்பிகைபாகன், யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

# காக்கைதீவு – அராலி வீதி கழிவுகளால் துர்நாற்றம்!

(சுதுமலை)

காக்கைதீவு - கல்லுண்டாய் அராலி பிரதான வீதியின் இரு மருங்கும் கழிவுகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன், போக்குவரத்துக்கும் இடையூறாகவுள்ளது. தமது குடியிருப்புக்களுக்கு அண்மையில் கழிவுகள் கொட்டப்படுவதால், தாம் நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக, காக்கைதீவு மக்கள் மானிப்பாய் பிரதேச சபையினருக்கு மகஜர் கையளித்துள்ளனர்.

மிகவிரைவில் கழிவுகளை அகற்றி, இயல்பான போக்குவரத்துக்கு ஒழுங்கு செய்யவுள்ளதாக மானிப்பாய்ப் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (91)

# பத்திரிகையாளர் டிப்ளோமா கற்கைநெறி சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை

(சுதுமலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய்க் கிளையினரால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறிக்கான சான்றிதழ்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

2002 ஆம் ஆண்டு நிறைவு பெற்ற இந்தப் பயிற்சி நெறியில் 150 பேர் பங்குபற்றியபோதிலும், இவர்களுக்கான சான்றிதழ்கள் இரண்டு வருடமாகியும் வழங்கப்படவில்லை.

பயிற்சியைப் பூர்த்திசெய்து வேலைவாய்ப்பின்றியுள்ள இளைஞர் - யுவதிகளுக்கு உரிய காலத்தில் சான்றிதழை வழங்கி உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், சம்பந்தப்பட்டவர்கள் பலமுறை கோரியும், இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர். (91)

# கியூடெக் நிறுவனத்தினரால் சனசமூக நிலையங்கள் புனரமைப்பு

(ஆழியவளை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கியூடெக் நிறுவனத்தால் 14 சனசமூக நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கான நிதியை பிரான்ஸ் தூதுவராலயம் வழங்கியுள்ளது.

சரசாலை, மறவன்புலவு, கண்ணகி குடியிருப்பு, புனிதநகர், பாணாவெட்டி, கற்பண்டா, ஆகிய ஆறு சனசமூக நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குடத்தனை, ஊறணி, நீதிவான் முகாம, கொடிகாமம், சிறுப்பிட்டி சபாபதிப்பிள்ளை முகாம், காட்டுப்புலம், பெரியமதவடி ஆகிய எட்டு சனசமூக நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (122)

## புவேந்தன் பாலர் பாடசாலை கலைவிழா

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் கலைவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி பகல் 2 மணிக்கு வை.இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ஜெயராஜ், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (29)

# மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்துக்கான விசேட பயிற்சி வகுப்பு ஒன்று இன்று காலை 8.30 மணிமுதல் கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரிப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும் என தென்மராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் க. குமாரசாமி தெரிவித்தார். (31)

# அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சை

(உடுவில்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஆண்டு இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக, அறநெறிப் பாடசாலை அதிபர் கா. கணேசதாஸன் அறிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆதரவில் நடைபெறும் இந்தப் பரீட்சைக்கு ஆண்டு 3 முதல் 11 வரை பயிலும் அனைத்து மாணவர்களும் தோற்றலாமென்றும், பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (101)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : இ.சகானா
முகவரி :அல்வாய்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


# சின்னஞ்சிறு செய்திகள்

## சத்துணவு கொடுப்பனவு அதிகரிப்பு

தற்போது தரம் ஒன்று மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சத்துணவுக்கான கொடுப்பனவு 2005 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச்.எம்.வட்டனியந்த தெரிவித்தார்.

தற்போது தரம் ஒன்றில் கல்வி பயிலும் ஒரு மாணவனுக்கு சத்துணவு வழங்குவதற்கு நாளொன்றுக்கு 15 ரூபா வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை 20 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## மாணவிக்கு புலமைப்பரிசில் நிதி

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் ஜெயராசா டென்சிகா -இந்த ஆண்டு பொதுத் திறமைக் கான ஜனாதிபதி மிலேனியம் புலமைப்பரிசில் நிதியைப்பெற்றுள்ளார். (101)

## வீதியால் சென்றவரை தாக்கி பணம் அபகரிப்பு

வீதியால் வந்த நபரைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு, அவரது பணத்தை அபகரித்துச்சென்ற சம்பவமொன்று அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்றது. கனகரத்தினம் ரவிச்சந்திரன் (வயது 44) என்பவரையே தாக்கிக்காயப்படுத்திவிட்டு, தாக்கியநபர் பணத்தையும் எடுத்துக் கொண்டு சென்றார். காயமடைந்த நபர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றார். (29)

## ஆசிரிய வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

நாட்டில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படவுள்ளதாக, கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் அறிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 9970 பாடசாலைகளில் 16642 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் தேசிய பாடசாலைகளில் 4855 ஆசிரியர்களுக்கும், மாகாணப் பாடசாலைகளில் 11787 ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

# முற்றவெளியில் கலாசார மண்டபம்

(யாழ்ப்பாணம்)

முற்றவெளி திறந்தவெளியரங்கில் கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெறவுள்ளது. அடுத்த மாதம் 08 ஆம் திகதி அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த கலாசார மண்டபத்துக்கான நிதியை கலாசார அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது. முதற் கட்டமாக 50 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார். (02)

# போஷாக்கு குறைந்தவர்களுக்கு சத்துணவு

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும் போஷாக்கு குறைந்த குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் விசேட சத்துணவு திட்டத்தின்கீழ், மாதாந்த மருத்துவப் பரிசோதனையில் போஷாக்கு குறைவானவர்களைக் கண்டறிந்து, சத்துணவு வழங்கப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (63)

### வவுனியாவில் குழப்பத்தை ஏற்படுத்திய

# படையினரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவு!

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளத்தில் மாவீரர்தின நிகழ்வின்போது நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, குற்றம் செய்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு பொலிஸ் விசாரணைக்கு உதவி புரியுமாறு வன்னிப் பிராந்திய படைகளின் தளபதிக்கும் - வவுனியா 211 ஆம் படைப்பிரிவின் படைத் தளபதிக்கும் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

கடந்த 25 ஆம் திகதியன்று வவுனியா வேப்பங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பவம் - கடந்த இரண்டரை வருட காலத்தில் வவுனியாவில் நடைபெற்றுள்ள முதலாவதும், மோசமான சம்பவமும் ஆகும்.

வேப்பங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகம் அத்துமீறிய ஒரு சம்பவமாகும். இன்று அவசர காலச் சட்டம் அமுலில் இல்லாத வேளையில், இராணுவத்தினர் துப்பாக்கிகளைப் பயன்படுத்தும்போது, அது தொடர்பாக அவர்களுக்குரிய வரையறைகளை அவர்கள தெளிவாகத் தெரிந்திருக்கவேண்டும்.

சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸ் திணைக்களமே முதன்மையான சட்ட அமுலாக்கல் பிரிவாகச் செயற்பட்டு வருகிறது. தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் பொலிஸாருக்கு உதவியாக இராணுவம் செயற்பட வேண்டும். சட்டவிரோதமான செயல்களில் எவரும் ஈடுபடும்போது, முதன்மைச் சட்ட அமுலாக்கல் பிரிவினராகிய பொலிஸார் குற்றவியல் சட்ட நடவடிக்கையின் கீழும், குற்றவியல் சட்டத்தின்படி, அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான பிரிவு 81 இன் கீழும், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றால், அதனைத் தடுப்பதற்குரிய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழும், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களையோ, சட்டவிரோதமாகக் கூடிக் கலகம் விளைவிப்பவர்களையோ கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

ரீ 56 ரகத் துப்பாக்கி அல்லது இயந்திரத் துப்பாக்கிகள் அவசர காலச் சட்டம் அமுலில் இல்லாத சூழ்நிலையில் சட்டவிரோதமாகக் கூடுபவர்களைக் கலைப்பதற்காகப் பயன்படுத்தப்படுமானால், அதிகார பலாத்காரம் புரிந்ததாகக் கருத வேண்டி ஏற்படும்.

எனவே, குற்றம் புரிந்தவர்களை நீதிமன்றத்தின்முன் நிறுத்துமாறு வன்னிப்பிராந்தியத்தின் இராணுவத் தளபதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. குற்றம்புரிந்த எந்த ஒரு நபரும் சுதந்திரமான புலனாய்விலிருந்தும், சுதந்திரமான வழக்கு விசாரணையிலிருந்தும், சுதந்திரமாக வழக்குத் தொடுப்பதிலிருந்தும் தப்பிச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், நீதிமன்றத் தீர்ப்பைத்தவிர வேறு எவரும் எவரையும் தண்டனைக்கு உள்ளாக்கமுடியாது. வேப்பங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா, அனுராதபுரம் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் - கொலை முயற்சிக் குற்றமாகும்.

எனவே, வேப்பங்குளச் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவத்தினரின் துப்பாக்கிகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டும். குறித்த துப்பாக்கிகள் மேலதிக புலன் விசாரணைக்காக வவுனியா பொலிஸ் தலைமையகத்திடம் கையளிக்கப்படவேண்டும். வேப்பங்குளம் சம்பவத்தில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருட்களும் மேல் விசாரணைக்காக உடனடியாக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் புலன் விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஆஜர்செய்யப்படவேண்டும். குற்றம் புரிந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்தச் சம்பவம் குறித்து, இர்ராணுவப் பொலிஸாரின் மூலம் விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் பிரதிகள் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட ஆகியோருக்கும் தகவலுக்காக சட்டமா அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.






வவுனியா மாவட்டத்தில் கந்தசாமி கோகுலதாஸின் "இரு வழிப் பார்வை ஒரு துளிவிஷம்" என்னும் கவிதை தொகுதி வெளியீட்டு விழாவில் - வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், முதற்பிரதியை எழுத்தாளர் முல்லைமணி வே.சுப்பிரமணியம் வெளியிட்டுவைக்க, பாடசாலை அதிபர் கோ.ஸ்ரீரஞ்சன் பெற்றுகொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள் கனகரவி)*

## வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு - கடந்த வியாழக்கிழமை உடுத்துறை மகா வித்தியாலயத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் குணவிழி தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரை மூன்று மாவீரர்களின் தாயாரான மனோன்மணி முத்துக்குமார் ஏற்றிவைக்க, ஈகச் சுடரை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஆர்.ஜெயசீலன் ஏற்றிவைத்தார். மாவீரர் உருவப் படங்களுக்கு மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.ரகுநாதன் மலர்மாலை அணிவித்தார். தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான சங்கர் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்துகொண்டு, மாவீரர்களின் பெற் றோர்களுடன் கலந்துரையாடினார்.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் பொது நிறுவனங்கள் இணைந்து இந்தக் கௌரவிப்பு நிகழ்வை ஒழுங்குசெய்தன. (122)

## பிரதேச சபை உப அலுவலகம் செம்பியன்பற்றில் திறந்துவைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சி.பசுபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா நாடாவைவெட்டி கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

போரால் பாதிப்படைந்த இந்தக் கட்டடம் மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (122)

## கடன் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி

வட்டக்கச்சி மாவடி கிராம சேவையாளர் பிரிவில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

போரூட் நிறுவன நிதியுதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவுடன் கடன் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கே இந்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சியை விவசாய போதனாசிரியர் சி.பிரபாகரன் வழங்கினார். (09)

## சிவாச்சாரியார்கள் வரவேற்பும், நூல்வெளியீடும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றன

(கிளிநொச்சி)

சைவ சிவாச்சாரியர்களின் வரவேற்பு ஊர்வலமும் "யோக சுவாமிகளும் கிளிநொச்சியும்" என்னும் நூல் வெளியீட்டு விழாவும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

கிளிநொச்சி கந்தசாமி கோயிலிருந்து காலை 10.30 மணியளவில் ஆரம்பமான ஊர்வலம் 11.00 மணிக்கு பண்பாட்டு மண்டபத்தைச் சென்றடைந்தது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை பேராசிரியர் சண்முகதாஸ் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைத்தார். நந்திக் கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து அகவணக்கம் செய்யப்பட்டது.

இந்த விழாவின் தலைமை உரையை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நிகழ்த்தினார். நூலின் ஆசியுரையை கணேசானந்த மகாதேவ சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சிவச்சாரியார் இந்திரனேஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற் பிரதியை ஸ்ரீமத் ஆனந்த சுவாமி வழங்கிவைக்க, செல்லத்துரைசுவாமி பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வின் சிறப்புரையை பேராசிரியர் சிற்றம்பலம், நாச்சியார் அம்மையார் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் த.இராசநாயகத்தால் ஸ்ரீலஸ்ரீ.திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் கருத்துத் தெரிவிக்கையில் -

இன்றைய சமூகத்துக்கு சமய ஆன்மீகத்தில் ஈடுபாடு குறைவாக வுள்ளது எனவும், 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி அறிவமுது பதிப்பகத்தால் நான்கு புதிய நூல்கள் வெளியீட்டு விழா

கிளிநொச்சி அறிவமுது பதிப்பகத்தின் 4 புதிய நூல்கள் வெளியீட்டு விழாவும், நூல் அறிமுக விழாவும் நாளை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி பேரிகை அமைப்பின் ஒழுங்கமைப்பால் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முனைவர் கோபூரின் மனக்கோலம், கப்டன் மலரவனின் போர் உலா, ரஷ்ய புதினமான உண்மை மனிதனின் கதை, பண்டிதர் நாட்குறிப்பேடு ஆகிய புதிய வெளியீட்டு நூல்களே அறிமுகம்செய்து வைக்கப்படவுள்ளன.

இதில் தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்துள்ள விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

மணலாற்றிலிருந்து மாங்குளம் முகாம் வரை கப்டன் மலரவனின் பயணக்குறிப்பு தாங்கிய நூலும், மனநோயுற்றவர்களைக் குணப்படுத்த அவர்களின் உறவினர் மந்திரவாதிகளை நாடுவதைத் தடுக்கவும். பேய்கள், வசியம், சூனியம், தீட்டு எனக் கொள்ளும் மூடத்தனத்தைப் போக்குவதான விடயமும், ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதுமுதல் இலங்கை, இந்திய படை நடவடிக்கைகள் அறிஞர் நினைவு, தமிழீழக் குறிப்புக்கள், வீரப்பன், அரபாத் சாவு போன்ற விபரங்கள் உள்ளடக்கிய நூலும், களத்தில் விழுப்புண் அடைந்து இரு கால்களையும் இழந்தபின்னும் நம்பிக்கையுடன் போராடி வெற்றிபெறும் போர் விமானியின் கதையை விவரிக்கும் நூல் போன்றனவே வெளியிடப்படவுள்ளன.

### குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதி

(கிளிநொச்சி)

புளியங்குளத்துக்கும், கனகராயன்குளத்துக்கும் இடைப்பட்ட வீதி மிகவும் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இந்த வீதி புனரமைக்கப்பட்டு ஒரு ஆண்டுக்குள்ளேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மருதங்கேணிக் கல்விக்கோட்டத்தில்

## காலை உணவு வழங்குவதற்காக சமையல் பாத்திரங்கள் பெறலாம்!

மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கான சமையல் பாத்திரங்கள் உலக உணவுத் திட்டத்தினரால் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்தச் சமையல் பாத்திரங்களை பாடசாலை அதிபர்கள் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்விக்கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நவம்பர் 15 ஆம் திகதிமுதல் காலை உணவு வழங்கப்பட்டுவருகிறது. (122)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

திருக்குறள்

## நமது நோக்கு

# திருமலை வன்செயல்கள் உணர்த்தும் வரலாற்று அனுபவ எச்சரிக்கைகள்

'பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டு விட்டது' என்ற கதையைப்போன்று ஜே.வி.பியினர் மீண்டும் நாட்டில் கலவரங்களை ஏற்படுத்தி அரசியல் ஆதாயம் பெறும் அராஜக வழிமுறைகளைக் கையாளத் தொடங்கிவிட்டனர் என்றே கூறவேண்டும்.

வன்முறைகளை உருவாக்குவதே ஜே.வி.பி. கிளர்ச்சிக் கும்பல்களின் புரட்சிகரச் சித்தாந்தம் என்பதையும், அவர்கள் வெகுஜனங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் இரத்தவெறி கொண்ட தேசவிரோத அரசியல் நடவடிக்கைகளிலேயே நம்பிக்கை கொண்டவர்கள் என்பதையும், 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் பின்னரான வரலாற்றுப் பதிவுகள் மிகத் தெளிவாக இனம் காட்டி வந்துள்ளன.

மிகத் தெளிவான அரசியல் சிந்தனையோ, தேசிய நம்பிக்கையோ தொலைநோக்கு அணுகுமுறைகளோ அற்ற ஜே.வி.பியின் மக்கள் விரோத அரசியல் நடவடிக்கைகளின் எதிர்விளைவுகள் எப்படியானவை என்பதை 1971 ஆம் ஆண்டிலும், 1987 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியிலும், தென்பகுதியில் நடந்து முடிந்த அனர்த்தங்களும், வன்முறைகளும், ஆறுகளில் மிதந்த பிணங்களும், வீதிகளில் ஓடிய இரத்த ஆறும், சந்திகளில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட மனிதச் சடலங்களும் இன்றும் நினைவூட்டி மனங்களை அதிரவைத்த வண்ணமேயுள்ளன.

இடதுசாரி சமதர்மக் கோட்டுபாடுகளையே அவமதிக்கும் வகையில் கலாசாரமற்ற, மந்தபுத்தியுள்ள ஒரு வன்முறைக் கும்பலாகவே இயங்கிய ஜே.வி.பியினர், தம்மை மார்க்சீய-லெனினிச கொள்கை வாதிகளாகச் செஞ்சட்டை அணிந்து, புரட்சிக் கோஷமிட்டு, உலகுக்குத் தங்களை இனங்காட்ட முயல்வது தான் கேலிக்குரிய கோமாளித்தனம்.

இன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு தந்திரமான முறையில் ஒப்பந்தம் செய்துகொண்டு, சுயநலம் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏமாற்றி, 'பொறிக்குள்' தள்ளிவிட்டு மிகப் பெரும் அரசியல் அனுகூலங்களைப் பெற்று, வலுவடைந்துள்ள நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை அச்சுறுத்தி, மிரள வைக்கும் தகமை கொண்டவர்களாக தம்மை வலுப்படுத்திக் கொண்டுள்ளமையானது, மீண்டும் அவர்களை முருங்கை மரத்தில் ஏறும் வேதாளங்களாக்கி விட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

இதுவே இன்று சிறிலங்கா எதிர்கொள்ளும் - இனி எதிர்கொள்ளப்போகும் அனைத்து அவலங்களுக்கும் காரணமாகப் போகிறது.

இடதுசாரிகளாகத் தொடங்கி இன்று சிங்கள இனவாதிகளாகத் தமது சுயத்தை இனம்காட்டத் தொடங்கியுள்ள ஜே.வி.பியினரே இன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அரசியல்ரீதியிலான பேச்சுவார்த்தைகளுக்குப் பெரும் இடையூறாக உள்ளனர். இப்படிக் குறிப்பிடுவது ஏனைய சிங்களக் கட்சிகளும் - அவற்றின் தலைமைகளும் இனவாதத் தன்மையற்றவையென்றோ அல்லது அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகப் பெரும் விசுவாசத்துடன் செயற்படுகிறார்கள் என்றோ அர்த்தப்படாது என்பதையும் கவனத்திற்கொள்வது அவசியமாகும்.

ஜே.வி.பியினர் வெளிப்படையாகவே சமாதான முயற்சிகளையும், அதற்கு அனுசரணை வழங்கும் நோர்வே அரசினது அர்ப்பணிப்புடன் கூடிய நடவடிக்கைகளையும், சர்வதேச நாடுகளின் பின்புல ஆதரவையும் நிராகரிக்கின்றனர், எதிர்க்கின்றனர். எல்லாவற்றையும்விட விடுதலைப்புலிகளுடன் பேசுவதை அவர்கள் விரும்புவதாக இல்லை... அதற்கு மேல் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவசியமான இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்து, அரசு பேச முற்படின் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வதாக எச்சரித்துமுள்ளார்கள்.

எனவே ஜே.வி.பியின் பிடிக்குள் அரசும், ஜனாதிபதியும் இறுகிக் கொண்டிருக்கும் நிலையில் ஜே.வி.பியினர் மீண்டும் தமது மேலாதிக்க அராஜக நடவடிக்கைக்கைகளை கட்டவிழ்த்துவிட்டு, குழப்பத்தை உண்டு பண்ணி, அதன் மூலம் அரசியல் ஆதாயம் பெறும் மூலோபாயத்துடன் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை திருகோணமலையில் கட்டவிழ்த்துவிடத் தொடங்கியுள்ளனர்.

இது விடுதலைப்புலிகளைச் சீண்டி, எரிச்சலூட்டி, போர்ச்சூழல் ஒன்றைத் தோற்றுவிக்கும் 'சதியை' உள்நோக்காகக் கொண்டதேயாகும்.

திருமலையில் உருவாகியுள்ள பதற்றம் நியாயபூர்வமானதெனக் கூறும் ஜே.வி.பி யின் குரலை, அரசின் குரலாக எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததேயாகும்... இந்தக் குரூரமான குரலைக் கண்டிக்க மறுத்து, அரசு மௌனம் காக்குமேயானால், இந்த வன்முறைகளின் பின்னணியில் அரசின் மறைகரம் இருக்கிறது என்ற சந்தேகமும் உறுதியாகி விடும்.

திருமலை வன்செயல்களின் பின்னணியில் இனவாதிகளும், பொலிஸாரும் ஜே.வி.பிக்குப் பலம் சேர்க்கிறார்கள் என்ற செய்தி சமாதான முயற்சிகளுக்கு எச்சரிக்கையூட்டும் ஆபத்தான சமிக்ஞையே என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த சமிக்ஞை ஜே.வி.பியும் - அரசும் யுத்தத்தைத் தூண்டும் முயற்சிக்கான அடித்தளத்தை உருவாக்க முனைகின்றன என்பதையே உணர்த்துவதாகவும் உள்ளது.

## நாடும் நடப்பும்




# வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் பனை அபிவிருத்திச் சபை புறக்கணிப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன்

இலங்கை அரசின் 2005 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில், பனை அபிவிருத்திச் சபையைப் பொறுத்தவரை 2004 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டைவிடக் குறைவாகவும், அபிவிருத்திக்கென மேலதிக நிதி இல்லாமல் இருப்பதும், பனை அபிவிருத்திச்சபை எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கவலை தெரிவித்தார்.

இந்தச் சபை மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி விரிவாக்க வேலைத் திட்டங்களின் அடிப்படையில், புதிய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்யவோ, துறைசார் பனந்தொழில் வல்லுநர்களின் அபிவிருத்தியை மேம்படுத்தவோ, புதிய நவீன தொழில்நுட்பப் பயன்பாடுகளை மேற்கொள்ளவோ முடியாதளவுக்கு 2005 ஆம் ஆண்டின் வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு காணப்படுகின்றது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

2004 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் பனை அபிவிருத்திச் சபைக்கான நிதி ஒதுக்கீடு ஒரு கோடி தொண்ணூறு லட்சம் ரூபாவாகும். ஆனால் 2005 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ஒருகோடி எண்பத்தைந்து லட்சம் ரூபாவாகும். இந்தவித ஒதுக்கீடு அபிவிருத்திப் பணி மூலம் வளர்த்தெடுக்கப்படவேண்டிய ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியை மழுங்கடிப்பதற்காக எடுக்கப்படுகின்ற முயற்சியென்றே கருதப்படவேண்டியுள்ளது.

போரால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்குப் பகுதிக்குப் பொதுவான நிதி ஒதுக்கீட்டின் மூலம் எவ்வாறு புறக்கணிப்புச் செய்யப்பட்டிருக்கிறதோ, அதே பாணியிற்தான் வடக்கு - கிழக்கு மக்களின் - குறிப்பாக ஒரு தொழில்துறைசார்ந்த மக்களின் வளர்ச்சிப் பணிக்கென செயற்பட்டுவரும் ஒரேயொரு நிறுவனமான பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளை விரிவுபடுத்த முடியாத அவல நிலையை வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு சுட்டிக் காட்டி நிற்கிறது.

அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட தொகையின் மூலதனச் செலவாகக் காணப்படும் தொகை, சென்ற வருடம் போல் இந்த ஆண்டுக்கான தொகையாக இருபது லட்சம் மட்டுமே காணப்படுகிறது. குறிப்பாகக் கட்டட அமைப்பு, பொறியியல் உபகரணங்கள் கொள்வனவு, வாகனங்கள் பிற மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கப்படாத நிலையே இங்கு காணப்படுகிறது. இந்த நிலையில் பனை அபிவிருத்திச் சபை வெறுமனே ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கும் ஒரு சபையாகவே செயற்படுவதைத் தவிர, வேறெதுவும் செய்யக் கூடிய வாய்ப்பு அதற்கில்லை.

இத்தகைய நிலைகளை நாம் ஊன்றிக் கவனிக்கும் போது, கைதடி பனை அபிவிருத்தி வள ஆராய்ச்சி நிலையம் திருத்தப்படுமா? அதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுமா? என்பதெல்லாம் கேள்விக் குறியாகவே உள்ளன. ஏனெனில் இவ்வாறான நிலையம் திருத்துவதற்கு மட்டும் முப்பதைந்து லட்சம் தேவையெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் வைத்து நோக்குமிடத்து, பனை அபிவிருத்திச் சபை - விரிந்து, பரந்து, வளர்ந்து போகின்ற நிலை குறைந்து, அபிவிருத்திக்குரிய ஒரு சபையாகவே மாற்றக்கூடிய ஒரு வரவு - செலவுத் திட்டமாகவே அமைந்திருக்கின்றதென்பது தெளிவு எனத் தெரிவித்தார்.

## கிராம அலுவலர்களின் வேலை நாட்கள் குறைப்பு

கிராம அலுவலர்களின் அலுவலக நாட்களை 2005 ஜனவரி முதல் வாரத்துக்கு 4 நாட்களாக மட்டுப்படுத்துவதற்கு, அரச பொதுநிர்வாக அமைச்சு உடன்பட்டுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் கே.பி.சில்வா தெரிவித்தார்.

இதன்படி வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் முற்பகல் 9 மணி முதல், நண்பகல் 12.30 மணிவரை அலுவலக நாட்களாகக் குறிப்பதற்கு அரச பொதுநிர்வாக அமைச்சின் செயலர் எஸ்.எல். மானம்பெரும கவனத்தில் எடுத்திருப்பதாகவும் பிரதிச் செயலாளர் தெரிவித்தார்.

## கரவெட்டிப் பங்கில் ஒளிவிழா போட்டிகள்

கரவெட்டிப்பங்கிலுள்ள புனித அந்தோனியார், புனித மரியாள், துன்னாலை சதாசகாய அன்னை, சாரையடி வேளாங்கன்னி அன்னை ஆகிய ஆலயங்களின் ஒளிவிழாப் போட்டிகளை பங்குத் தந்தை அருட்திரு.அலோசியஸ் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் நடத்தவுள்ளார்.

இந்தப் போட்டியில் பேச்சு, பாட்டு, கட்டுரை, வேதாகம மனனம்,வினாவிடை எனப் பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறுவர், இளைஞர், வளர்ந்தோரெனப் பலரையும் உள்ளடக்கியதாகப் போட்டிகள் நடைபெறும் எனப் பங்குத் தந்தை தெரிவித்தார்.

விபரங்களை அறியவிரும்புவோர் - பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (13)

## அன்ரன்பாலசிங்கம் - சொல்ஹெய்ம் இன்று லண்டனில் சந்திக்கவுள்ளனர்

நோர்வேயின் விசேடப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்முக்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று இன்று லண்டனில் நடைபெறவுள்ளது.

இதன் போது அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையில் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாகத் தோன்றியுள்ள நிலைமைகள் பற்றியும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக - ஜனாதிபதி சந்திரிகாவோடும், கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக எரிக்சொல்ஹெய்ம் டிசம்பர் 6 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒன்பது மணி நேர வேலைக்கு எதிராக ஐ.தே.கட்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

அரச ஊழியர்களின் ஒரு நாள் வேலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரித்ததற்கு எதிராக, நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், அதனைச் சார்ந்த தொழிற்சங்கங்களும் தீர்மானித்துள்ளன.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது மேற்கொளளப்பட்டு வருவதாக அந்தக் கட்சியின் தொழிற்சங்கங்களின் கூட்டுத் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி லொக்குகே தெரிவித்தார்.

ஒரு நாளின் 8 மணித்தியால வேலையை மேலும் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிப்பதன் மூலம் ஊழியர்களது உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

அரச ஊழியர்களுக்கு சுயாதீனமாக காலையிலும் மாலையிலும் அரைமணி நேரம் மேலதிகமாக வேலைசெய்யவேண்டுமென, அரசு வெளியிட்டுள்ள அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் இதை முழுமையாக நீக்கிக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

எயிட்ஸ் ஒழிப்பு நாள்...

- சந்துரு

# தனிமரம் தோப்பாவதில்லை தனிமரங்கள் இன்றி தோப்புமில்லை

அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல் நகரின் வைத்தியசாலைகளில், இளவயதுடைய வாலிபர்கள் சிலரது உடலில் நிர்ப்பீடணத் தொகுதி பலவீனமடைந்தமை காரணமாக ஏற்பட்ட நோய்க் குணங்குறிகள் பற்றி 1981 களில் தேடியறிய முற்பட்டபோதே எயிட்ஸ் நோய் நிலை உலகில் முதன் முதல் இனம் காணப்பட்டது. இந்த இளைஞர்கள் ஒருவித வைரஸ் தாக்கத்துக்கு உட்பட்டமையே இந்த நிலைக்குக் காரணம் என்பது கண்டறியப்பட்டதுடன் பின்னர் அந்த வகை வைரசுக்கு எச்.ஐ.வீ வைரஸ் எனவும் பெயரிடப்பட்டது.



பிரான்ஸ் நாட்டிலுள்ள லூயி பாஸ்ரர் நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான லுக்மக் டெய்னர் என்பவரும். அமெரிக்க தேசிய நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானி றொபர்ட் கொய்லோ என்பவரும் இணைந்தே இந்த வைரசுக்கு எச்.ஐ.வீ என 1983 களிலே பெயரிட்டனர். இது தமிழில் "மனித நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் வைரஸ் நுண்கிருமி" என அழைக்கப்படுகிறது. இந்த எச்.ஐ.வீ வைரஸ் தொற்றுக் காரணமாக ஏற்படும் நோய் நிலைமைக்கு எயிட்ஸ் (AIDS) எனப் பெயரிடப்பட்டது. இது தமிழில் "பெறப்பட்ட நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் நோய்" என குறிப்பிடப்படுகின்றது.

உலகில் இன்றுவரை இருவகையான எச்.ஐ.வீ. வைரஸ்கள் இனம் காணப்பட்டுள்ளன. அவை எச்.ஐ.வீ.-1, எச்.ஐ.வீ.-11 எனப் பெயரிடப்பட்டுள்ளன. இந்த இருவகை வைரஸ்களுமே எயிட்ஸ் நோய் நிலைகளை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது. அத்துடன் இந்த வைரஸ், தொற்றுக்குட்பட்டவர்களது குருதி, ஆண்களது சுக்கிலப்பாயம், பெண்களது யோனி மடற் சுரப்பி, கருப்பைக் கழுத்துச் சுரப்பு மற்றும் தாய்ப்பாலிலும் பெருமளவில் அடங்கியிருக்கும் என மருத்துவ அறிக்கைகள் உறுதி செய்திருக்கின்றன. இந்த எச்.ஐ.வீ வைரஸ் நுண்கிருமிகள் உயிர் வாழ்வதற்கு உயிர்க் கலங்கள் தேவை. அதனால் பொதுவான சாதாரண சூழலில் இந்த வைரஸ் கிருமிகள் உயிர்வாழ முடியாது. அவைகள் உயிர்வாழவும், பல்கிப் பெருகவும் உயிருள்ள மனிதக் கலங்களுடன் சேரவேண்டியுள்ளது. மாறாக எமக்கு சூழலில் உள்ள நீர், வளி, உணவு மற்றும் பொருட்களில் அவை உயிர்வாழ முடியாது என்பதால் இவற்றுக்கூடாக இந்த வைரஸ் கடத்தப்படவும் மாட்டாது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எச்.ஐ.வீ வைரஸ் வரலாறு பற்றிய பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருப்பினும் விஞ்ஞானிகள் ஆராய்வு முடிவுகளின்படி, ஆபிரிக்கக் காடுகளில் வாழும் பச்சை நிறக் குரங்குகளில் இருந்து தோற்றம் பெற்றிருக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆபிரிக்கப் பழங்குடி மக்கள் இந்தக் குரங்கினது இறைச்சியையும் குருதியையும் பச்சையாக உட்கொள்ளும் பழக்கமுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த வருடத்துக்கான சமாதானத்துக்குரிய நோபல் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆபிரிக்காவின் கென்ய நாட்டைச் சேர்ந்த வங்காரி மாதாய் (WANGARI MAATHAI) என்ற சுற்றுச் சூழல் மேமபாட்டு ஆர்வலரது கருத்துபபடி, எயிட்ஸ் வைரஸ் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட ஒரு உயிரியல் கூறாக இருக்க முடியும் என்ற சந்தேகமும் எழுகின்றது.

## எயிட்ஸின் தாக்கம்

இன்று உலகில் பாலியல் தொடாபால் ஏற்படும் மேக நோய்களுள் மிகவும் பாதிப்பைத் தரக்கூடியதும், இதுவரை தடுப்பு மருந்துகள் எவையும் கண்டுபிடிக்கப்படாததுமான நோயாக எயிட்ஸ் நோய் உள்ளது. உலகைப் பொறுத்தவரை, மேக நோய்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இனம் காணப்பட்டிருப்பதை வரலாற்றுத் தகவல்கள் காட்டி நின்றாலும் எயிட்ஸ் நோயானது, மிகமிக அண்மைக் காலங்களிலேயே அதாவது மூன்று தசாப்த காலங்களுக்குள்ளாகவே அடையாளம் காணப்பட்டு, பாரிய தாக்கத்தை மனித குலத்தின் மீது ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

2002 ஆம் ஆண்டின் தகவல்களின்படி உலகம் முழுவதிலும் 57.5 மில்லியனிலும் அதிகமானவர்கள் எச்.ஐ.வீ. தொற்று மற்றும் எயிட்ஸ் நோய் நிலைகளில் வாழ்ந்ததாக கணிப்பிடப்பட்டுள்ளது. இதில் 2.7 மில்லியன் வரையிலானவர்கள் சிறுவர்கள் எனவும், 17.6 மில்லியன் வரையிலானவர்கள் பெண்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இந்த எயிட்ஸ் நோய் காரணமாக, இந்த ஆண்டுவரை 2.9 மில்லியன் பேர் வரை உயிர் இழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனத்தினது கருத்துப்படி ஒவ்வொரு வருடமும் 5 மில்லியன் பேர் எச்.ஐ.வீ. தொற்றுக்கு உட்படுவதாகவும், ஒவ்வொரு 6 செக்கனுக்கும் ஒருவர் என்ற வகையில் எச்.ஐ.வீ. தொற்றுக்கு உட்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் எயிட்ஸ் அமைப்புக் கூட இவ்வாறான கணிப்பீடுகளையே முன்வைத்தாலும் உண்மையில் இத்தொகைகளை விட எயிட்ஸ் மற்றும் எச்.ஐ.வீ. தாக்க நிலையின் தொகை அதிகமாக இருக்கக் கூடியமைக்கான சாத்தியக்கூறுகளே காணப்படுகின்றன. பொதுவாக எச்.ஐ.வீ. வைரஸ் ஒருவருக்குத் தொற்றினாலும், இன்றுள்ள இரத்தப் பரிசோதனை முறைகளின்படி, தொற்று ஏற்பட்டு 3 தொடக்கம் 6 மாதங்களின் பின்னரேயே, தொற்றியவரது குருதியின் மூலம் கண்டறிய முடியும். அது மட்டுமன்றி 5 தொடக்கம் 10 வருடங்களுக்குப் பிற்பாடுதான் எயிட்ஸ் நோய் நிலைமைகள் அவரிடம் வெளிப்படும் எனக் கூறப்படுகிறது. அத்தோடு இங்குள்ள இன்னுமொரு பிரச்சினை என்னவெனில், ஒருவர் தாமாக முன்வந்து இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளும் போதிலேயே. அவர் எச்.ஐ.வீ. தொற்றுக்கு உட்பட்டிருக்கின்றாரா? இல்லையா? என்பதையும கண்டறிய முடியும். அதுமட்டுமன்றி தனககு எச்.ஐ.வீ. தொற்று ஏற்பட்டிருக்குமோ என அச்சமடையும் ஒருவர் ஆகக்குறைந்தது 07 மாத இடைவெளிக்குள் இரு முறையாவது இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

இந்த இடைப்பட்ட காலப்பகுதிக்குள் இவ்வாறானவர்கள் கொள்ளும் பாலியல் தொடர்புகள், வழங்கும் குருதிகள் என்பவற்றினூடாக இந்த எச்.ஐ.வீ. வைரஸ் மற்றயவர்களுக்குக் கடத்தப்பட்டுக் கொணடிருக்கலாம். இந்தவகை மறைநிலையில் இருந்தபடியே இந்த வைரஸ் பல்லாயிரக்கணக்கானவர்களைப் பீடிக்கலாம். எனவே இவ்வாறான நடைமுறை விடயங்களோடு பார்க்கும்போது எச்.ஐ.வீ. எயிட்ஸ் தொற்றுக்களின் தாக்கம் உலகில் அதிகமாக - மிக அதிகமாக இருப்பதற்கான சாத்தியங்களே காணப்படுகின்றன. அண்மையில் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் தெரிவித்த கருத்துக்கள் தென்னாசிய நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கின்றது.

இந்தியாவில் 1986 களில் ஒரே ஒரு எயிட்ஸ் நோயாளியே இனம் காணப்பட்டிருந்ததாகவும், இன்று அது 50 லட்சத்தைத் தாண்டிவிட்டதாகவும், இவர்களுள் 15 வயது முதல் 25 வயதுக்குட்பட்டோர் 35% பேர் எனவும் அவர் கூறி இருப்பது நாம் அக்கறையோடு நோக்கவேண்டியதாக உள்ளது. இவரது கூற்றின் படி இந்தியாவின் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 0.5 வீதமானோர், 10 வருட காலப் பகுதிக்குள் எச்.ஐ.வீ. தொற்றுக்கு உடபட்டிருக்கின்றனர் என்பது ஒரு ஆபத்தான குறிகாட்டியே. சரியான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருத்தல், நோய் குறித்த அறிவு பெறாமல் இருத்தல் ஆகியவையே தமது நாட்டில் எயிட்ஸ் தாக்கம் அதிகமாக இருக்கக் காரணம் என டாக்டர் மன்மோகன் சிங் கூறியுள்ளது, எமது நாட்டுக்கும் பொருந்தக் கூடியதே.

## இலங்கைத்தீவில் எயிட்ஸ்.

இலங்கையைப் பொறுத்த வரையில் முதன் முதலாக எயிட்ஸ் தொற்றிய நோயாளி 1986 களிலேயே கண்டுபிடிக்கப்பட்டார். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணியான இவருக்கு எயிட்ஸ் நோயின் முக்கிய நோய்க் குறிகளுள் ஒன்றான காமோசி - கார்கோமா என்பதால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. வெளிநாட்டில் தொழில் புரிந்து விட்டு வந்திருந்த இலங்கையர் ஒருவருக்கு 1987 இல் எயிட்ஸ் தொற்றுக் கண்டறியப்பட்டது. இது இலங்கைத் தேசத்தின் இரண்டாவது நோயாளியாகப் பதிலு செய்யப்பட்டது. 1986 முதல் 2004 செம்ரெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் இலங்கையில் 591 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

(தொடரும்...)

- சரோஜா சிவச்சந்திரன் எம்.ஏ.

# எயிட்ஸ் - நோய் யாரையும் விட்டு வைப்பதில்லை...

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் முதலாம் திகதி எயிட்ஸ் - விழிப்புணர்வு நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது. மக்கள் உணர்ந்து கொள்ளும் வேகத்தில் எயிட்ஸ் - நோய், கட்டுப்பாட்டுள் அடங்கவில்லை. உலகில் எல்லா இடங்களிலும், இந்த நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வேகம் கூடுதலாகவே இருக்கின்றது. எச்.ஐ.வீ. கிருமி முதலில் தாக்கிய வட அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும் தான் இந்த நோயின் பாதிப்பு மிக அதிகமாக உள்ளது. எயிட்ஸ் நோயால் இறப்பவர்கள் தமது இழப்போடு, பாரிய சமூக பொருளாதார பாதிப்புக்களையும் விட்டுச் செல்கின்றனர். நோயின் பாதிப்புக்குள்ளாகும் ஒருவருக்கு ஏற்படும் வைத்தியச் செலவு சாதாரண குடும்பத்துக்குப் பாரிய சுமையாக உள்ளது.

## ஆபத்திலிருந்து தப்புவதற்கு வழிதான் என்ன?

இந்த நோய் காரணமாக அதிகமான பயிற்சி பெற்ற, அனுபவம் மிக்க அலுவலர்களை நாடுகள் இழக்க நேரிடுகின்றது. சமூக அடிப்படை அலகுகளான குடும்பங்கள் சீர்குலைந்து போகின்றன. குழந்தைகள், சிறார்கள் அநாதைகளாகின்றனர். உலகில் 2000 ஆம் ஆண்டில் சுமார் 80 லட்சம் குழந்தைகளின் தாய்மார், எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டனர் என்ற செய்தியை உலக சுகாதார நிறுவனம் காட்டியுள்ளது. இந்த நோய் விரைவாக அதிகரிப்பதற்கு, எச்.ஐ.வீ. கிருமி தொற்றுவதற்கு காரணமாகவுள்ள பாலுறவு நோய்கள் திடீரென அதிகரித்துக் காணப்படுவதே காரணம் எனக் கூறப்படுகின்றது. எச்.ஐ.வீ. கிருமி பரவுவதை எப்படித் தாமதப்படுத்தலாம்?

இதற்கு இலகுவான தீர்வு எதுவும் இல்லை. தனியான் மருந்தும் இதுவ்ரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும், இந்த நோயைத் தடுப்பதற்கு ஆக்க முறையான பல அணுகுமுறைகள் இன்று ஒவ்வொரு நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை, இந்த நோயின் பரவும் வேகத்தைத் தடுப்பதற்கு உதவியாக அமையலாம்.

எச்.ஐ.வீ. கிருமி பரவுவதற்கு முக்கிய காரணம் பாலுறவு. இந்தத் துறையில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. பாலுறவு மூலம் இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கு மக்களின் பாலுறவு நடத்தை முறைமை மாற்றப்படவேண்டும். பாதுகாப்பான பாலுறவுப் பழக்கங்களை உள்ளடக்கும் அணுகுமுறைகள் மக்களைச் சென்றடைய வேண்டும். பாலுறவில் அதிக ஆர்வம் கொண்டவர்கள், பாதுகாப்பான பாலுறவு முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். இந்த நோய் எளிதில் தொற்றும் வாய்ப்புடைய குழுவினரை இலக்காக கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் நன்மை பயக்கும். இளைஞர்கள் முக்கியமாக இந்த நோய்த் தொற்றுக்கு எளிதில் உள்ளாகின்றனர். உலகில் எச்.ஐ.வீ. தொற்றிய நோயாளிகளில் 50 வீதத்துக்கு மேற்பட்டோர் 15-24 வயதுக்குட்பட்டவராவர். பாலுறவு கொளளும் வயதை அடையுமுன்பே குழந்தைகளுக்கு இந்த நோயின் தாக்கம் பற்றியும், இதன் அபாயம் பற்றியும், தேவையான அறிவுரைகள் புகட்டப்படல் அவசியம்.

எயிட்ஸ் நோய் தடுப்பு முயற்சியில் கருத்தடை உறைகள் முககிய பங்கை வகிக்கின்றன. இன்று கருத்தடை உறைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவற்றின் பயன்பாடு பற்றிய அறிவு, தெளிவு, விளக்கம் போதிய அளவு மக்களுக்கு எட்டவேண்டும்.

எச்.ஐ.வீ நோய்த் தொற்றுக்கு பெணகள் மிகவிரைவில் ஆளாகின்றனர். சமூக வறுமை, காரணமாக விலைமாதர் தொழிலுக்குத் தள்ளப்படும் பெண்கள் இந்த நோயின் தாக்கத்துக்கு இலகுவில் உள்ளாகின்றனர்.

இன்று உலகில் தினமும் 3000 பேர் எச்.ஐ.வீ. வைரசினால் பாதிக்கப்படுகின்றனர். வளர்முக நாடுகளில் அதிகமான பெண்கள், குறிப்பாக 15-24 வயதுக்குட்பட்ட பெண்கள், பாலுறவில் அனுபவமுடைய வயதான ஆண்களுடன் உடலுறவு கொள்வதனால் அதிகமாக எச்.ஐ.வீ தொற்றுக்கு உள்ளாகின்றனர். பெண்களிடம் எச்.ஐ.வீ நோய் தொற்று இருப்பது பற்றிய அறிகுறிகள் பொதுவாகத் தெரிவதில்லை. இதனால் அவர்கள் மிக விரைவில் நலிவடைகின்றனர். இந்த நோயால் பாதிக்கப்படும் பெண்கள், சிகிச்சை எதுவுமில்லை. விரைவில் மரணத்தை சந்திக்கின்றனர். பெண்கள் நோய்க் குறிகளைக் கொண்டிருந்தாலும் தங்களின் அந்தரங்க வேதனையை இரகசியமாகவே வைத்துக் கொள்கின்றனர். மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதற்கு அவர்கள் விரும்புவதில்லை. வசதியும் இருப்பதில்லை.

சமயங்கள் எல்லாமே திருமண உறவிற்குட்பட்ட பாலுறவை வற்புறுத்திய போதிலும், சமுதாயத்தின் ஆற்றல் சமநிலையானது, ஆண்கள் ஏமாற்றுவதற்கு வழிவகுக்கின்றது. ஆண்களின் அத்துமீறிய பாலுறவு வேட்கை, சமுதாயத்தில் பெரிதாகக் கண்டுகொள்ளப்படுவதில்லை. பெண்கள் நேர்மையாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவதும் - சமுதாயத்தின் வேண்டுதல்.

பெண்கள் எச்.ஐ.வீ. பற்றிய அபாயத்தைத் தெரிந்திருந்தாலும், அதனைக் கணவரிடம் சொல்வதற்கு மனத் துணிவற்றவர்களாக உள்ளனர். பாலுறவு பற்றி வெளிப்படையாகப் பேசும் பக்குவம் வளர்முக நாடுகளில் வளர்ச்சியடையவில்லை. ஒழுக்கங்கெட்ட ஆண்களைத் தடுக்கக் கூடிய மனத்திடமற்ற பெண்கள், எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு ஆளாகி மரணிக்கின்றனர்.

இன்று வளர்முக நாடுகளில் அரசியல் தொட்டு சமூக பொருளாதார மட்டங்கள் வரை சமூகம் - குறிப்பாக இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல - இவற்றில் மத்தியில் எயிட்ஸ் எவ்வாறு நோக்கப்படுகின்றது என்பது கேள்வியாக உள்ளது.

பொருளாதார இடர்ப்பாடுகள், பெண்களின் பின்தங்கிய நிலை என்பவற்றுக்கும் எயிட்ஸ் நோய்க்கும் பெரியளவிலான தொடர்பு இருப்பதாகவே தெரிகின்றது.

எயிட்ஸ் தடுப்பு தொடர்பாக நாம் எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமாயின், வறுமை ஒழிப்பு மட்டுமல்ல, பாலுறவு முறைகளிலும் மாற்றம் வேண்டும். ஆண், பெண் இருபாலாருடனும் நாம் அதிகம் பேசவேண்டும். இதைத் தவிர நாம் செய்ய வேண்டியது எதுவும் இல்லை. எச்.ஐ.வீ. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் கருத்தடை உறைகள். கிருமி நீக்கம் செய்த ஊசிகள், பாலுறவுக் கல்வி போன்ற நடைமுறை சாதனங்கள் தாராளமாகக் கிடைக்க வழி செய்வது அவசியம். நோய்த் தொற்று அபாயம் அதற்கு எதிரான பாதுகாப்பு என்பனவற்றோடு, மக்களுக்கு எயிட்ஸ் பற்றிய தகவல்கள் போதியளவு கிடைக்க வேண்டும்.

எயிட்ஸ் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் பல முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்தி வந்த போதிலும், இதுவரை சரியான எதிர்ப்பு நடவடிக்கைகள், கட்டுப்படுத்துவதற்குப் போதியனவாக இல்லை என்பது கவலைக்குரியது. இன்று எமது நாட்டில், பெரும் பீதியை ஏற்படுத்திவரும் எயிட்ஸ் நோயின் வரவு, மேலும் பரவ விடாது பாதுகாக்க வேண்டியது சமூகத்தில் ஒவ்வொருவரினதும் பாரிய பொறுப்பாகும். ❄

# அமெரிக்கா மீதான தாக்குதல் தொடர்ந்தும் நடத்தப்படுமாம்

## அல் – ஹொய்டா பிரதித்தலைவர் சூளுரை



தமது கடைசி உயிர் இருக்கும் வரை அமெரிக்காவிற்கெதிரான போராட்டம் தொடர்ந்து நடத்தப்படுமென அல் - ஹொய்டா அமைப்பின் பிரதித் தலைவர் அல் - ஷர்காவி தெரிவித்துள்ளார்.

அல் - ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஷர்காவியின் வீடியோ ஒளிநாடாவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த வீடியோ நாடா அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரேயே பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த ஒளிநாடாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

புஷ்ஷையோ, ஹெரியையோ மற்றும் எந்த பிசாசையாவது நீங்கள் தெரிவு செய்யுங்கள். ஆனால் எமக்குள்ள கவலை என்னவெனில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க வேண்டுமென்பதுதான்.

அமெரிக்கர்களின் பாதுகாப்பென்பது, புஷ்ஷினதோ, ஹெரியினதோ ஏன் அல் - ஹொய்டா அமைபினது கைகளிலோ இல்லை. அவர்களது பாதுகாப்பு அவர்களது சொந்தக் கைகளிலேயே உள்ளது.

நான் இறுதியாக ஒரு சமாதானமான ஆலோசனை ஒன்றை முன்வைக்கின்றேன். அதில் முஸ்லிம்களுடன் அமெரிக்காவின் ஈடுபாடு தொடர்பாக இரண்டு தெரிவுகளே உள்ளன.

அதிலொன்று முஸ்லிம்களுடன் இணைந்து செல்வதா அல்லது முஸ்லிம்களை முற்றுமுழுதாக அழிப்பதா என்பதனை அமெரிக்கா தீர்மானிக்க வேண்டும்.

ஆனாலும் நாங்கள் பொறுமையானதும், சகிப்புத்தன்மையானதுமான தேசம் என்பதனை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும். எனவே நாம் எமது கடைசி உயிருள்ள வரை அமெரிக்காவைத் தாக்குவோம் எனத் தெரிவித்தார்.

இந்த ஒளிநாடாவைக் கடந்த திங்கட்கிழமை தாம் பெற்றுக் கொண்டதாகவும், இது எட்டு நிமிடத்திற்குரிய ஒளிநாடா எனவும், எனவே இதிலுள்ள முக்கியமான விடயங்களை ஒளிபரப்புவதற்கே தாம் தீர்மானித்திருந்ததாகவும் அல் - ஜசீராவின் பேச்சாளர் தெரிவித்தார்.




# அமெரிக்கப் பயணிகள் விமானம் ஆப்கானில் காணாமற் போனது

அமெரிக்க விமானப்படையினரால் பயன்படுத்தப்பட்டுவந்த பயணிகள் விமானம் ஒன்று ஆப்கானிஸ்தான் வான்பரப்பில் காணாமற போயுள்ளது.

காரா 212 என்கின்ற பயணிகள் விமானம் அமெரிக்க விமானப் படையினரால் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கத் துருப்பினரை ஏற்றி இறக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுவந்தது.

குறிப்பிட்ட விமானம் காணாமற் போன சமயம் விமானத்தில் மூன்று அமெரிக்கப் படைவீரர்களும், மூன்று விமானிகளும் பயணம் செய்துள்ளனர்.

குறிப்பிட்ட விமானம் காபூல் நகரின் புறநகர்ப் பகுதியில் உள்ள பாக்கறம் விமானப்படைத் தளத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற வேளையிற் காணாமற் போயுள்ளதாக அமெரிக்கப்படைகள் தெரிவித்தன.

இந்த விமானம் ஆப்கானிஸ்தானின் மத்திய பகுதியில் உள்ள மலைப் பிரதேசம் ஒன்றின் மேலாக பறந்துகொண்டிருந்த வேளையில் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க விமானப் படைத்தளம் ஒன்றிற்கு அபாய சமிக்ஞையை அனுப்பியதாக அமெரிக்க விமானப்படை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட விமானம் ஆப்கானிஸ்தான் மலைப்பகுதியில் விபத்துக்குள்ளாகியதா அல்லது எங்காவது பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டுள்ளதாவென உறுதிபடத் தெரிவிக்கமுடியாதிருப்பதாகத் தெரிவித்துள்ள அமெரிக்கப் படைகளின் பேச்சாளர் மேஜர் மார்க் மக்கனன் குறிப்பிட்ட விமானம் அல்ஹொய்டா தீவிரவாதிகளால் சுட்டுவீழ்த்தப்படவில்லை எனத் தெரிவித்தார்.

ஆனால் இவ்விமானம் அல் ஹொய்டாத் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கக்கூடும் என சில செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைய காலங்களில் அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் ஆப்கானிஸ்தானில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்துள்ளன.

கடந்த மார்ச் மாதம் அமெரிக்கப் படையினருக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஆறு அமெரிக்கப் படையினர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
30.11.2004 முதல்
சூர்யா (2 வேடம்), ஜோதிகா நடித்த
பேரழகன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
VANHELSING (ரகுலா படம்)
(சி-2723)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
3 வது வெற்றிவாரம் (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
தனுஷ், பிரியா நடித்த
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 (பு.நே) 30.11.2004 முதல்
RAMBO - 3 தாக்குதல் நிறைந்த படம்
(சி-3319)

யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேநாள் வெளியீடான
அஜித் இரு வேடங்களில்
பூஜா நடித்த
அட்டகாசம் (ரீல்ஸ்)
பு.நே. 10.30, 2.30, 6.30
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்





சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
P.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல்
நடித்த
சத்ரபதி
கா.நே. 11.00, 2.00, 7.00,




## ஈரான் மீது பொருளாதாரத் தடை

# விதிக்கப்படாதென்ற ஐ.நாவின் கூற்று மிகப்பெரிய வெற்றியென்கிறது ஈரான்

ஈரான் - அணுதொடர்பான செயற்பாடு மேற்கொள்ளும் காரணத்தால், அதன்மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படுமென்ற கருத்தை ஐ.நா.நிராகரித்தமையானது, அமெரிக்காவிற்கு மேலாக தமக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியென ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானின் முதன்மை வாய்ந்த சமாதானப் பேச்சாளரான ஹசன் றொகானி இது தொடர்பாக தெரிவிக்கையில் -

ஈரான் தனது அணுவாயுதத் திட்டத்தை ஒருபோதும் கைவிட மாட்டாது. அத்துடன் அமெரிக்காவின், ஈரான்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்ற



கோரிக்கையையும் சகல நாடுகளும் நிராகரித்துவிட்டன.

சர்வதேச அளவில் அமெரிக்காவை தனிமைப்படுத்த இயலுமென்பதனை நாம் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துள்ளோம்.

வியன்னாவில் நடந்த இந்த ஐ.நா.கூட்டத்தில் இந்தமுடிவு அறிவிக்கப்பட்டாலும், அங்கிருந்த அமெரிக்க அதிகாரிகள் மிகவும் ஆவேசமடைந்தனர். அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. ஆனாலும் அங்கிருந்த மற்றையவர்கள் அமெரிக்காவின் திட்டத்தை தோல்வியடையச் செய்து ஈரான் வென்றுவிட்டதாக எமக்குத் தெரிவித்தனர்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஈரான் தனது அணுவாயுதம் தொடர்பாக நடத்திவந்த பேச்சுவார்த்தை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை மீளவும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# நவீன மயமான ஏவுகணை ரஷ்ய அரசால் பரிசோதனை



நவீன மயப்படுத்தப்பட்ட ஏவுகணையொன்றை ரஷ்ய அரசாங்கம் வெற்றிகரமான முறையில் ஏவி பரிசோதனை மேற்கொண்டுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எ-135 என்ற ஏவுகணையே கஸகஸ்தானிலிருந்து வெற்றிகரமாக ஏவி பரிசோதிக்கப்பட்டதாகும்.

ரஷ்யா ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியபோதும், அமெரிக்காவே இதில் முன்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

செப்ரெம்பர் 11 இல் அமெரிக்க உலக வர்த்தக மைய கட்டடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர், உலகளாவிய ரீதியிலான பயங்கரவாதத்துக்கெதிராக ரஷ்ய அதிபர் புடின் பாதுகாப்புத் தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுத்துள்ளமையையே இந்த ஏவுகணைப் பரிசோதனை எடுத்துக் காட்டுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கஅதிபர் புஷ் புதிய வகையான ஏவுகணைகளைப் பாதுகாப்புக்காக உருவாக்கி வரும் நிலையில் ரஷ்ய அதிபர் புடினும் இந்த வகைக்குச் சென்று தன்னுடைய திட்டத்தையும் நவீன மயமாக்கல் என்று காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் புடினின் இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் ஏவுகணைத் திட்டத்திற்கு எந்தளவிற்கு சமமானதென்ற கேள்வியும் எழுவதாக செய்திகள் தெரிவித்தன.

# பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக முஷாரப் தொடர்ந்து நீடிக்க அனுமதி!

## அந்த நாட்டு நாடாளுமன்றம் வழங்கியது



பாகிஸ்தான் ஜனாதிபதியும் இராணுவத் தளபதியுமான பர்வேஷ் முஷாரப் தொடர்ந்து இராணுவத் தளபதியாகப் பதவி வகிக்க வேண்டும் என்ற பிரேரணை பாகிஸ்தான் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து விலகுவதாக முஷாரப் தெரிவித்துள்ள நிலையில் இந்தப் பிரேரணை நேற்றையதினம் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரேரணையில் பாகிஸ்தான் உபஜனாதிபதி முகமட் மியன் ஆம்றோ கைச்சாத்திட்டார்.

பாகிஸ்தான் அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டால், அது முன்வைக்கப்பட்ட நாளில் இருந்து ஒருமாதத்துக்குள் அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி அதில் ஒப்பமிட வேண்டும்.

இதற்கமைய பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தென்னமரிக்காவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில் இப்பிரேரணையில் பாகிஸ்தான் உபஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளார்.


## சிறு விளம்பரம்

கொக்குவில் மருத்துவ பீடத்திற்கு அண்மையில் கோயில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய (ஐந்து அறை இரண்டு கோல், குசினி உட்பட) வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: திருமதி S.கனகரத்தினம், 122/11, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (996)



DF ODW

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்

நோர்வே மாணவர்களினதும் அபிவிருத்தி நிறுவனத்தினதும் நிதியுதவியுடன் செயற்படுத்தும்!

க.பொ.த. (சா/த) 2004 டிசெம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான

கருத்தரங்கு

நடைபெறும் இடங்கள்:
ODW செயற்திட்ட வளநிலையம் :- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
ODW செயற்திட்ட வளநிலையம் :- பாலிநகர் - மல்லாவி
ODW செயற்திட்ட வளநிலையம் :- அறிவியல் நகர்

| இல. | பாடம் | காலம் | நேரம் |
|---|---|---|---|
| 01 | விஞ்ஞானம் | 02.12.2004 | 8.30 - 3.00 |
| 02 | ஆங்கிலம் | 03.12.2004 | 8.30 - 3.00 |
| 03 | கணிதம் | 04.12.2004 | 8.30 - 3.00 |

NOTE:

கருத்தரங்கு முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட மாதிரி வினாத்தாளாகக் காணப்படும்.

விளம்பர அனுசரணை:

நமது ஈழநாடு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் சூறாவளியுடன் கடும் மழை!

## வளிமண்டலத் திணைக்களம் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் இன்று கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்றும் - குறிப்பாக முல்லைத்தீவு, திருகோணமலை மாவட் டங்களில் சூறாவளி ஆபத்து இருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக் களம் நேற்றிரவு அறிவித்தது.

நள்ளிரவிலிருந்து எந்த நேரமும் சூறாவளி வீசுவதற்கான சந்தர்ப்பம் இருப்பதாகவும் - வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களில் பலத்த மழை பெய்வதற்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு வரையான கரையோரப் பகுதிகளில் பலத்த மழைபெய்யும்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் 15 முதல் 25 கி.மீ.வேகத்தில் கடும் காற்று வீசும் அதேவேளை இது சிலவேளைகளில் 40 முதல் 50 கி.மீ.வேகத்துடனான சூறாவளியாகவும் வீசக்கூடும். கடற்பகுதி கடும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலத் திணைக்கள அறிக்கைகள் தெரிவித்தன.

# திருமலையில் ஊரடங்கு...

திருமலை மாவட்ட அரச அதிபர் காமினி றொட்றிக்கோ, போர் நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதி நிதிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், யு.என். எச்.சி. ஆர் பிரதிநிதிகள், மதகுருக்கள், சமாதான குழுக்களின் பிரதி நிதிகள், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய கூட்டுப்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி - நாட்டில் அமைதிச் சூழல் ஏற்படுவதையே ஜனாதிபதி விரும்புகின்றார். இருபது வருடகாலமாக இடம்பெற்ற யுத்தத்தைத் தொடர்ந்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதன்மூலம் தோன்றியுள்ள அமைதிச் சூழலை குலைப்பதற்கு எந்தச் சக்தியும் முயலக் கூடாது.

அத்துடன் தற்போதைய அமைதிச் சூழலைக் குழப்பினால் சகல சமூகங்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் தெரிவித்தார்.

மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் சமாதானக் குழுக்ககளை புனரமைத்து அமைதிக்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் அலஸ் தோட்டம் பகுதியில் வான் ஒன்றுடன் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட கண்டியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சுமித் என்பவரின் சடலம் துவரங்காட்டு களப்புப் பகுதியிலிருந்து நேற்றுக்காலை 10.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டது.

உப்புவெளிப் பொலிஸாரின் விசாரணைகளை அடுத்து சடலம் திருமலை பொதுவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவரது வாகனம் நித்தியபுரி பகுதியில் எரிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டபோதும், விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

நேற்றுக்காலை திருகோணமலையில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபோதும், பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்களின் தொகையும், அரச அலுவலகங்களுக்கான ஊழியர் வரவும் மிகக்குறைவாகவே காணப்பட்டது. இதனையடுத்து அனைத்து தமிழ், முஸ்லிம் பாடசாலைகளும் காலை 9 மணிக்கு முன்பாகவே மூடப்பட்டன.

அரச அலுவலகங்களும் காலை 10 மணியுடன் மூடப்பட்டன. வர்த்தக நிலையங்கள் சில காலையில் திறக்கப்பட்டபோதும், அவையும் காலை 10 மணியளவில் மூடப்பட்டன. போக்குவரத்துச் சேவை எதுவும் இடம்பெறவில்லை.

நேற்றும் மாலை 4 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படும்.

(10,04)

# முறிவடையும் ஆபத்தில்...

கிழக்கிலும் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் தொடர்ச்சியான வன்முறைச் சம்பவங்கள் போர் நிறுத்த உடன்படிக்கையின் உறுதித்தன்மையை மிகமோசமாகப் பாதித்திருக்கிறது.

நாம் ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கையை வைத்திருந்தாலும் கூட, இங்கு யுத்தம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இதனை நாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அழித்துவிடும் ஒருவித யுத்தமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்தையே புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரையின் உள்ளடக்கம் வெளிப்படுத்தியுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறாத சூழ்நிலை யுத்தநிறுத்த உடன்படிக்கையை உருக்குலைத்து விடும் என்பதை பிரபாகரன் மறைமுகமாகக் கூறியுள்ளார் என்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

# இரண்டு குழுக்களுக்கு இடையில் குருநகர் பகுதியில் மோதல்கள்!

## பத்துப் பேர் காயம் – வீடுகள் எரிப்பு – ஊரடங்கு அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல்கள் மோசமடைந்ததைத் தொடர்ந்து, அங்கு நேற்றிரவு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் பாதுகாப்புக்காக பெருமளவு படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு குருநகர் பகுதியிலுள்ள இரு குழுக்களுக்கிடையே ஆரம்பித்த மோதல் நேற்று நண்பகல் உக்கிரமடைந்தது. திருநகர்ப் பகுதியில் சுமார் 7 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்படி பகுதிக்குள் குவிக்கப்பட்டதுடன் ஒரு குழுவினர் மற்றைய பகுதிக்குச் செல்வதைத் தடைசெய்தனர். படையினரும், பொலிஸாரும் இரண்டு குழுக்களுக்கும் இடையிலான மோதலைத் தணிக்க நட வடிக்கை எடுத்தபோதும் அது பயனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலைவரை இந்தக் குழு மோதல்கள் தொடர்ந்ததன் காரணமாக இரண்டு பெண்கள், வயோதிபர்கள் உட்பட பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மோதல்களில் 44 வயதான அருள்தாஸ், 67 வயதான மாதன் முத்து, 21 வயதான ஜெகன், 42 வயதான ரி.வனிதா, 18 வயதான ரி.லோகநாயகி, 67 வயதான பாலசிங்கம் தாசன், 24 வயதான செ. ஜெகதீஸ், 40 வயதான எம். அருள் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தக் குழு மோதலின்போது கூரிய ஆயுதங்கள், டைனமட் வெடி குண்டுகள் என்பன பயன்படுத்தப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். நிலைமையைத் தணிப்பதற்கு நேற்றுமாலை பொலிஸார் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தினர். இதேவேளை, குருநகர் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பொலிஸ் உயரதிகாரிகளும், மதத் தலைவர்களும் சம்பவ இடத்துக்குச் சென்று இரு குழுக்களையும் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது வன்முறைகளில் ஈடுபடுவதை இரு தரப்பினரும் நிறுத்தவேண்டும் என்றும், வன்முறைகளில் ஈடுபட்டு இயல்புநிலையை குழப்பினால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் பொலிஸ் உயரதிகாரி வர்ணகூரே தலைமையிலான பொலிஸாரும், குருநகர் பங்குத்தந்தை சகாயநாயகம், உதவிப் பங்குத்தந்தை சாள்ஸ் யஸ்ரின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### வவுனியா....

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

நாளைய தினம் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களை மூடியும் போக்குவரத்து சேவையை இடைநிறுத்தியும் பூரண ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.(03)

### பேக்கரி....

ளர்களும் வாடிக்கையாளர்களும் என 10 இற்கும் மேற்பட்டவர்கள் அங்கு காணப்பட்டனர். வீசப்பட்ட கைக்குண்டு வெடித்திருந்தால் பாரிய உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பேக்கரி உரிமையாளர் ரி.நந்தகுமார் மட்டக்களப்பு பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து குறிப்பிட்ட கைக்குண்டை பொலிஸார் மீட்டனர்.

பொலிஸ் நிலையத்திலிருந்து 300 மீற்றர் தொலைவிலும் தாண்டவன் வெளிச்சந்தியிலுள்ள சோதனைச்சாவடியில் இருந்து 50 மீற்றர் தொலைவிலும் இந்த பேக்கரி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### பிரபாகரன்...

ஆயினும் தற்போது யுத்த நிறுத்த உடன்பாடு உறுதியற்ற நிலை அடைந்துள்ளது என்றும், சமாதான முயற்சிகள் கேள்விக்குள்ளான நிலையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி முறையை நீதிமன்றம் மற்றும் நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்லும் வகையில் மாற்றியமைக்க அரசாங்கம் முனைப்பு மேற்கொள்ளுமாக இருந்தால் அதனை ஐ.தே. கட்சி வரவேற்கும்.

இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு ஒன்றினை எதிர்பார்க்குமிடத்து மத்திய அரசாங்கம் பலம் மிக்கதொன்றாக இருக்கவேண்டும்.

மத்திய அரசு பலம்வாய்ந்ததாக இருப்பதற்கு நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி அவசியம். இதனை இல்லாதொழிப்பதை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

மத்திய அரசின் பலம் வாய்ந்த இயந்திரமே நிறைவேற்று அதிகார முறை ஜனாதிபதிப் பதவியாகும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து இருக்கும் பட்சத்தில் நிறைவேற்று அதிகாரத்தில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

ஜனநாயகத்தின் உயிர்நாடியான தேர்தலை உரிய காலத்தில் நடத்தவேண்டும். இதனால் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

# கந்தர்மடம் சந்திப் பகுதியில் குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்!

கந்தர்மடம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் - ஒருவரைத் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெற்றது. சம்பவத்தின்போது 40 வயதை உடைய க.றகுமான் என்பவரே தலையில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கந்தர்மடம் சந்திக்கு அண்மையாக கடைஒன்றின் முன் நின்று கொண்டிருந்த சமயமே மேற்படி நபரை இனந்தெரியாத குழு ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்து தாக்கி விட்டுச் தப்பிச்சென்றது.

காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## மரண அறிவித்தல்



### மார்க்கண்டு பாலசுந்தரம்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுந்தரம் 30.11.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு – மாணிக்கம் தம்பதிகளின் மகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சுஜிலா (லண்டன்), சுஜிலன், லஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாகரனின் (லண்டன்) மாமனாரும் அபிராவின் பேரனும் சிவானந்தம், மகேஸ்வரி (லண்டன்), சிவநாதன் நிர்மலாதேவி (இந்தியா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய் (சி/3415)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### நமசிவாயம் சிவபாதம்

(புத்தொளி மாஸ்ரர்)

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் – சிவபாதம் (இளைப்பாறிய அதிபர், சமாதான நீதவான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்) அவர்கள் (30-11-2004) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் – இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் – திலகவதி ஆகியோரின் மருமகனும் ருக்குமணிதேவியின் அன்புக் கணவரும் சிவலோகநாதன் (பிரான்ஸ்), சித்திராதேவி, சித்திரலேகா (கனடா), சிவதனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகைபாகன், மோகனச்சந்திரன் (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), பாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கேசவி, கேதுசன், ஆர்த்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (02-12-2004) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 11-00 (பழைய நேரம்) மணிக்கு காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ருக்குமணிதேவி
(மனைவி)

'செல்வ அகம்', ஆனைக்கோட்டை (சி/3416)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த (சா/த) மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2004

சோ.ரஜீவ்

## கணிதம்

1. சுருக்குக.

$3\sqrt{125} - \sqrt{80} + 6\sqrt{5}$

2. $62 \times 38 = 2356$ ஆகும்
$6.2 \times 0.38$ இனது பெறுமானத்தைக் காண்க?

3. A:B = 2:3, A:C = 3:4 எனின் A:B:C காண்க.

4. 

எண் கோட்டினால் காட்டப்படும் சமனிலியை எழுதுக.

5. 

(a+b) இன் பெறுமானம் காண்க.

6. தீர்க்க
$5x - 7 = 3x + 11$

7. $2x=3y$ எனின் $\frac{6x + 15y}{3y + 6x}$ இனது பெறுமானம் காண்க.

8. $\frac{12}{13}, \frac{4}{15}, \frac{3}{7}$ ஆகிய பின்னங்களை ஒழுங்குபடுத்தி, > எனும் குறியீட்டைக் கொண்டு வரிசைக்கிரகமாக எழுதுக.

9. கூட்டுக.
$101_{\text{இரண்டு}} + 111_{\text{இரண்டு}}$

10. a,b, 3 z, a,b $\neq 0$ ஆயின் $a^{-4} \div b^3$ ஐ நேர்ச்சுட்டியில் எடுத்துரைக்க.

11. $10g \times \sqrt{}^x$ இன் பெறுமதி என்ன?

12. 5,-3 எனபவற்றை மூலங்களாகக் கொண்ட x இனாலான இரு படிச்சமன்பாடு யாது?

13.
I) 0.000753 இதனை விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டின் (நியமவடிவில்) எழுதிக் காட்டுக.
II) $6.078 \times 10^4$ இதனை சாதாரண வடிவில் தருக.

14. உருவில் தரப்பட்ட $y = x^2$, $y = 9$ எனும் இருவரைபுகளும் வெட்டும் புள்ளியின் x ஆள் கூறுகளை காண்க.




15. $(a-3)^2$ இதன் விரிப்பை எழுதுக. இந்த விரிப்பைப் பயன்படுத்தி $97^2$ இன் பெறுமானம் காண்க.

16. $3^{6x-5} \times \frac{1}{729^y} = 9$ எனின் (x-y) இன் பெறுமானம் காண்க.

17. 

உருவில் ABCD ஒரு சதுரமாகும். சதுரத்தின் பரப்பளவு 100 cm ஆகும். செங்கோண முக்கோணி BEC இல் CE = 8cm பக்கம் BE இன் நீளம் காண்க.

18. P எனும் தொடையின் தொடைப்பிரிவுகளின் எண்ணிக்கை 128 எனின் அதில் உள்ள மூலகங்களின் எண்ணிக்கையை காண்க.

19. T (x,y) → $T^1$(x+1, y-3) எனும் நிபந்தனையில் பெயர்ச்சி உருமாற்றம் ஒன்றின் போது (3,5) இன் புதிய ஆள் கூறு யாது?

20. 

இங்கு a இன் பெறுமானத்தை கண்டு இது எவ்வகை முக்கோணி எனக் காண்க.

21. $(2005^{1/2} - 2004^{1/2})(2005^{1/2} + 2004^{1/2})$ இனது பெறுமானம் காண்க.

22. $qx = \frac{m + q}{r}$ எனின் q வை எழுவாயாக மாற்றுக.

23. ஒரு கார் 3 நிமிடத்தில் 3300 m தூரம் செல்கிறது. இந்தக் காரின் சராசரிக்கதி மணிக்கு எத்தனை km எனக் காண்க.

24. அரைவட்டமையம் 0 ஆகும். CA தொடலி , OA = 3 cm, CA= 4 cm எனின் CB ஐ காண்க.




25.
I) $x^2 - 7x$ எனும் கோவையை நிறைவர்க்கமாக்க, சேர்க்க வேண்டிய மாறா உறுப்பு யாது?
II) இந்த இருபடிக் கோவையை நிறைவர்க்கமாக எழுதுக.

26.


இந்த உருவில் a, b, c, d, e,f, z, p, g, r, s, t, u, v, w என்பவற்றினது பெறுமானங்களைக் காண்க.

27. $\frac{a}{b} = \frac{3}{5}$, $\frac{b}{c} = \frac{7}{6}$ எனின்
i) $\frac{a}{c}$ (ii) $\frac{a+b}{b}$ (iii) $\frac{b+c}{c}$ என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.

28. tan A = 0.75 எனின்,
(i) sin (90-A)
(ii) sin A
(iii) cos A என்பவற்றின் பெறுமானங்களை காண்க.

29. ABC என்னும் பகுதிகளுக்குள் P என்னும் புள்ளி AB, BC இல் இருந்து சமதூரத்தில் அசையுமாயின் புள்ளி P இன் ஒழுக்கு யாது?




30. 0 என்னும் தொடக்கப் புள்ளி ஒன்றிலிருந்து வடக்கு நோக்கி 5 km சென்ற வள்ளம் பின்னர் மேலும் 5 km கிழக்கு நோக்கிச்சென்று புள்ளி A யை அடைந்தது. இத்தரவை வரிப்படம் மூலம் காட்டுக. 0 இலிருந்து புள்ளி A இனது திசைகோள் யாது?

## பகுதி II

1.
கூட்டல் விருத்தி ஒன்றின் முதல் 3 உறுப்புக்களின் கூட்டுத்தொகை 27 ஆகும். பொது வித்தியாசம் 4 ஆகும்.
1. தொடரின் முதல் உறுப்பு.
2. தொடரின் 8 ஆம் உறுப்பு
3. முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகை என்பவற்றைக் காண்க.

B பெருக்கல் விருத்தி ஒன்றில் 3 ஆம் உறுப்பு 23 உம், 6ஆம் உறுப்பு 2048 உம் ஆகும் எனின்

I) தொடரின் பொது விகிதம்
II) முதலாம் உறுப்பு
III) முதல் 5 உறுப்புக்களின் கூட்டுத்தொகை என்பவற்றைக் காண்க.

2.

a) சார்பு $y = (x-2)^2 - 3$ இன் வரையை வரைவதற்கான x,y இன் பெறுமானம் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| y | 6 | 1 | .. | .. | .. | 1 | 6 | 13 |

I) மேலே உள்ள அட்டவணையிலுள்ள் வெற்றிடங்களை நிரப்புக. பெறுமானங்களை பெற்ற விதத்தைக் குறிப்பிடுக.

II) வரைபுத்தாளில் x அச்சு வழியே ஓர்அலகை வகைக் குறிப்பதற்கு 10 சிறுபிரிவுளையும், y அச்சு வழியே இருஅலகுகளை வனைக்குறிப்பதற்கு 10 சிறுபிரிவுகளையும் கொண்டு அளவிடைளைத் தெரிந்து எடுத்து, பெறுமானங் களை கொண்ட பூரணமான அட்டவணையைப் பயன்படுத்தி சார்பின் வரைபை வரைக.

b) உமது வரைபிலிருந்து
I) சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் கூறுக.

II) சார்பு மறையாக இருக்கும் x இன் பெறுமானங்களின் வீச்சைக் காண்க.

II) சார்வின் இழிவுப் பெறுமானத்தைக் காண்க.

c) அதே வரைபுத்தாளில் தக்க ஏகபரிமாண வரைபு ஒன்றை வரைந்து சமன்பாடு $x^2-5x+3=0$ எனும் சமன்பாட்டின் மூலங்களைக் காண்க.

3.

ஒரு நேர் விளிம்பு, கவராயம் cm/mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தியும், அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டியும்

I) PQRS என்னும் நாற்பக்கலை PQ = 8cm, PS = 5.2cm, $Q\hat{P}S = 60^0$, PQ// RS, PR= 9cm ஆக அமையும் வண்ணம் அமைக்க. இங்கு $Q\hat{P}R$ ஒரு கூர்ங்கோணமாகும்.

II) பக்கம் QR இன் நீளத்தை அளந்து பெறுமானத்தைக் காண்க.

III) RP ஐ P இல் தொடக் கூடியதாகவும், QP ஐ நாண் ஆகவும் உள்ள வட்டம் அமைக்க.

IV) அதன் ஆரையை அளந்து எழுதுக.
V) முக்கோணி QPR இன் பரப்பளவுக்கு சமனான பரப்பளவுள்ள முக்கோணி ஒன்றைப் பெயரிடுக. அதற்கான காரணத்தையும் தருக.

4.




அருகிலுள்ள உருவில் PQRS ஒரு செவ்வக வடிவாகும். இதிலிருந்து ABCD எனும் வடிவம் வெட்டி அகற்றப்படுகிறது. AC= 15 cm, DB = 10 cm ஆகும். மேலும் AE = 1/3 ac.

I) செவ்வகம் PQRS இன் பரப்பளவு
II) முக்கோணிகள் ABD, DBC ஆகியவற்றின் பரப்பளவு?
III) ▲ABD, ▲DBC ஆகியவற்றின் பரப்பளவுகளுக்கு இடையேயான விகிதம். என்பவற்றைக் காண்க.
IV) ABCD அகற்றப்பட்டபின் எஞ்சிய பரப்பளவு

b) அரைக் கோளவடிவ ஈயப்பாத்திரம் ஒன்றின் தடிப்பு 2 cm அதன் உள் விட்டம் 14 cm ஆகும்.



I) பாத்திரத்தின் உள்மேற்பரப்பளவைக் காண்க.
II) பாத்திரத்தின் தட்டையான (நிழற்றிய) மேற்பரப்பைக் காண்க.
III) பாத்திரத்தின் மொத்தப் பரப்பளவைக் காண்க.
IV) பாத்திரம் ஆக்கப்பட்ட ஈயத்தின் கனவளவைக் காண்க.

5.

A) குமார், அஸ்வர், நீகன் ஆகிய மூவரும் முறையே ரூபா 30,000 ரூபா, 13, 000 ரூபா, 25, 000 ரூபா எனும் தொகைகளை முதலீடு செய்வதன் மூலம் வியாபாரமொன்றைத் தொடங்கினர். ஒரு வருட முடிவிலே தேறிய இலாபம் 66,500 ரூபாவாக உள்ளது. அவர்கள் தேறிய இலாபத்தில் ரூபா 7000 ஐ நிலையான வைப்பாக ஒதுக்கிவிட்டு, எஞ்சியதை முதலீடு செய்த பணத்தின் விகிதப்படி தமக்குள்ளே பங்கிட்டனர். ஒவ்வொருவரும் பெற்ற இலாபத்தைக் கணிக்க.

b) சீமெந்துக் கலவை ஒன்றைத் தயாரிப்பதற்கு பின்வரும் பொருட்கள் தேவை என ஒரு தொழிலாளி கூறினார்.
5 தாச்சி மணல்
3 தாச்சி சீமெந்து
4 தாச்சி நீர்
சீமெந்துக் கலவையை தயாரிக்கும் போது,
I) மணல், சீமெந்து , நீர் ஆகியன இடப்படும் விகிதத்தை தருக.
II) 12 தாச்சி சீமெந்துடன் கலக்கப்படவேண்டிய மணல் தாச்சிகளின் எண்ணிக்கை காண்க.
III) சீமெந்துக் கலவையில் மொத்தமாக மூவகைப் பொருட்களும், 48 தாச்சிகள பயன்படுத்தப்பட்டிருப்பின் அக்கலவையிலுள்ள மணல், நீர் சீமெந்து ஆகியவற்றின் தாச்சிகளின் எண்ணிக்கையைத் தனித்தனியே காண்க.

c) ஒரு வியாபாரி ரூபா 120 000/- பெறுமதியான பொருளை ரூபா 115 000/- இற்கு விற்க நேரிட்டது.
I) நட்டம்
II) நட்ட சதவீதம் ஆகியவற்றை காண்க.

6.

a) ஜோன்சன்ஸ் எனும் பெரிய கம்பனி ஒன்றில் பணிபுரிபவர் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர்களின் மதிப்பிட்ட வயது (ஆண்டுகள்) | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| 18-22 | 8 |
| 22-26 | 12 |
| 26-30 | 10 |
| 30-34 | 27 |
| 34-38 | 38 |
| 38-42 | 34 |
| 42-46 | 30 |
| 46-50 | 31 |

(மேலே உள்ள அட்டவணையிலே வகுப்பு ஆயிடைகள் 18 ஆண்டுகள் அல்லது 18 ஆண்டுகளிலும் கூட, ஆனால் 22 ஆண்டுகளிலும் குறைய 22 ஆண்டுகள் அல்லது 22 ஆண்டுகளிலும் கூட, ஆனால் 26 ஆண்டுகளிலும் குறைய என்றவாறு தெரிந்து எடுக்கப்பட்டுள்ளது)
I) மேலே தரப்பட்ட தரவுகளுக்கமைய, ஊழியர் ஒருவரின் இடை வயதைக் கணிக்க. (ஆகார வகுப்பின் இடைப் பெறுமானத்தை எடுகொண்ட இடையாக எடுக்க)

b) சந்தை ஒன்றில் மரக்கறி விற்பனையாளர்கள் 30 பேர் - குறித்த நாள் ஒனறில் விற்ற மரக்கறிகளின் நிறைகள் கீழே தரப்பட்டுள்ளன. வகுப்பாயிடைகள் 3 kg அல்லது 3 kg இற்கு மேற்பட்டது. ஆனால் 6kg இற்கு குறைந்தது 6 kg அல்லது 6kg இற்கும் மேற்பட்டது. ஆனால் 9kg இற்கும் குறைந்தது என்ற வாறு இந்த அட்டவணையில் வகுப்பாயிடைகள் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளன.

| நிறை kg | 03-06 | 06-09 | 09-12 | 12-15 | 15-18 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் வியாபாரிகளின் எண்ணிக்கை | 3 | 5 | 9 | 5 | 7 |

ஒவ்வொரு வகுப்பாயிடைகளிலும் நடுப்பெறுமானத்தைக் கருத்திற் கொண்டு மேலே உள்ள தரவுகளுக்குரிய மீடிறன் வலையுரு வலையம் பல்கோணியை வரைக.

7.

a) வட்டநாற்பக்கல் தொடர்பான இரண்டு தேற்றங்களை தெளிவாக எழுதுக.




உருவில் AB ⊥ PQ, BC⊥PR எனின்,
I) APCB என்பது வட்ட நாற்பக்கல் எனவும்
II) $A\hat{P}C = D\hat{B}C$ எனவும் நிறுவுக.




c) I) AB, BC,AC ஆகிய பக்கங்களுடன் தொடர்புடைய தேற்றம் ஒன்றைக் கூறுக.
II) தொடர்புடைமையை எழுதுக.

8.




a) 1 cm = 2 m எனும் அளவிடைக்கு வரையப்பட்ட காணித்துண்டு ஒன்றின் கிடைப்படமானது வரிப் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

I) மேற்போன்ற கிடைப்படத்தை வரைவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெளிக்கள ஏட்டுக் குறிப்பை எழுதுக.

II) கிடைப்படத்தின் பரப்பளவை $cm^2$ இற் கணிக்க

III) காணித்துண்டின் பரப்பளவை $m^2$ இல் தருக.